முச்சந்தி முரளி



"உள்ளத்தில் நல்ல உள்ளங்களை கடவுள் கெதியில கூப்பிடுவார் எண்டது உண்மைதான் போல"

Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 143

புதன்கிழமை
17 ஏப்ரல் 2024

சித்திரை 04 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை

போர்ப்பதற்றத்தின் மத்தியிலும்

# இலங்கை வருகிறார் ஈரான் அதிபர் ரைசி



## அமெரிக்கா, இஸ்ரேலை பகைக்கிறதா இலங்கை?

**கொழும்பு, ஏப்ரல் 17**

**பிராந்தியத்தில் போர்ப்பதற்றம் ஏற்பட்டுள்ள பின்புலத்தில் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி எதிர்வரும் 24ஆம் திகதி இலங்கைக்கு வருகைதரவுள்ளார். இது சர்வதேச அரசியலிலும் வர்த்தகத்திலும் இலங்கைக்குப் பெரும் சிக்கலைக் கொடுக்கலாம் என்று கருதப்படுகின்றது.**

15

## ஈரானின் அணுவுலைகளை தாக்க இஸ்ரேல் திட்டம்!

### ஐ.நா. எச்சரிக்கை

வொஷிங்டன், ஏப். 17

ஈரானின் அணு உலைகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தும் சாத்தியங்கள் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் அணுசக்தி கண்காணிப்பு அமைப்பு அச்சம் வெளியிட்டுள்ளது.

சிரியத் தலைநகர் டமஸ்கஸில் உள்ள ஈரானியத் தூதரகத்துக்கு அருகாக கடந்த முதலாம் திகதி இஸ்ரேல் தாக்குதலை நடத்தியது. இந்தத் தாக்குதலில்

15

## யுவதிக்கும் அவர் தாயாருக்கும் இளவாலையில் கத்திக்குத்து!

### தாக்குதல்தாரி! உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், ஏப். 17

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், காதலிக்கும் அவரின் தாயாருக்கும் சரமாரியான கத்தி வெட்டுத் தாக்குதலை நடத்திய நபர், தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

பண்டத்தரிப்பு, பனிப்புலம் பகுதியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 35 வயதான இளைஞர் மேற்படி யுவதியைக் காதலித்து வந்த நிலையில் ஏற்பட்ட முரண்பாடே இந்தத் தாக்குதலுக்குக்

15

## விஷப்பூச்சி கடித்து நபரொருவர் இறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 17

விஷப்பூச்சி கடித்ததையடுத்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நபர், நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

15

## இந்தியத் தேர்தல் வரலாற்றில் வாக்களிக்கும் ஈழத்துப்பெண்

சென்னை, ஏப். 17

இந்தியத் தேர்தல் ஆணையத்தால் வழங்கப்படும் வாக்காளர் அடையாள அட்டையைப்பெற்றுக்கொண்ட நளினிகிருபாகரன் என்ற ஈழத்தமிழ்ப் பெண்ணொருவர், வரவிருக்கும் மக்களவைத் தேர்தலில் வாக்களிக்கவுள்ளார்.

இதன்மூலம் இந்தியத் தேர்தலொன்றில் வாக்களிக்கும் முதல் ஈழத்தவர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

இவர், 1986ஆம் ஆண்டு இராமேஸ்வரத்தில் உள்ள மண்டபம் பகுதியில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் இலங்கையில் இருந்து ஏதிலி

15

முன்னாள் இராஜாங்க அமைச்சர்

## பாலித தெவரப்பெரும மின் தாக்கியதில் பலி!



கொழும்பு, ஏப். 17

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பாலித தெவரப்பெரும (வயது - 64) மின்சாரம் தாக்கியதில் நேற்று உயிரிழந்தார்.

வீட்டில் இரண்டு மின்சுற்றுகளை இணைக்கச் சென்றபோது

15

## வெடுக்குநாறிமலை அட்டூழியம்; ம.உ.ஆணைக்குழு விசாரணை

வவுனியா, ஏப். 17

சிவராத்திரி வழிபாட்டுத் தினத்தன்று வவுனியா வெடுக்குநாறிமலையில் இடம்பெற்ற அட்டூழியங்கள் தொடர்பாக வவுனியா பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் நேற்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரிகள், ஆலயத்தினர் மற்றும் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் ஆகியோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின்

15




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யானைகள் அட்டகாசம் வாழ்வாதாரம் பாதிப்பு

## கொழுந்துபுலவு மக்கள் விசனம்

**கிளிநொச்சி, ஏப். 17**
**கண்டாவளைப் பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட கொழுந்துபுலவுப் பகுதியிலுள்ள குடியிருப்புகளில் காட்டு யானைகளால் தொடர்ச்சியாக வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என்று அந்தப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**



இங்கு வாழும் 300க்கும் மேற்பட்ட குடும்பங்களது நாளாந்த ஜீவனோபாயமாக விவசாயமே காணப்படுகின்றது.
விவசாயப்பயிர்களை, யானைகள் நாளாந்தம் துவம்சம் செய்து வருவதால் அந்தப்பகுதி மயானம் போல காணப்படுகின்றது என்று மக்கள் கூறுகின்றனர்.
மாலை ஆனதும் தாம் அச்சமடைந்த நிலையில் வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த பகுதியை நேரில் வந்து பார்வையிட்டு பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும்.
இந்தப் பகுதியில் நிரந்தரமான யானை வேலி ஒன்றை அமைத்துத் தர வேண்டும் எனவும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ப-113)

# தமிழ்ப் பொதுவேட்பாளர் சாத்தியமேயில்லை!!!

## காதர் மஸ்தான் கூறுகிறார்

வவுனியா, ஏப். 17
ஜனாதிபதித் தேர்தலுக்காக தமிழர் தரப்பில் பொதுவேட்பாளரை நிறுத்துவது சாத்தியம் இல்லை என்ற முடிவை தமிழ்க் கட்சிகள், புத்திஜீவிகள் எடுப்பார்கள் என எண்ணுகின்றேன் - இவ்வாறு கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே.கே.மஸ்தான் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது-
ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழர் தரப்பில் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டு வெற்றி அடைவார் என்றால் பரவாயில்லை. ஆனால் ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்த வரை தேசியக் கட்சியைச் சார்ந்த ஒருவரே வெற்றி பெறுவார். எங்களைப் பொறுத்த வரை நாங்கள் ஆதரிக்கின்ற ஜனாதிபதியை வெற்றியடைய வைப்பதற்கான முயற்சிகளை எடுப்போம்.
மேலும் தமிழ்த் தரப்பில் பொதுவேட்பாளர் என்ற விடயம் என்பது எந்த விதத்தில் சாத்தியம் அல்லது இதன் ஊடாக என்ன நன்மை கிடைக்கும் என்று எமக்குத் தெரியவில்லை - என்றார். (ஒ-110)

# போதைப்பாவனைக்காக திருட்டு: குருநகரில் சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 17
குருநகரில் போதைப்பொருள் பாவனைக்காக திருட்டில் ஈடுபட்டவர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.
யாழ். மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விஷாந்த தலைமையிலான பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைவாக கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
குருநகரில் கடந்த வாரம் இரு வேறு இடங்களில் 90 ஆயிரம் ரூபா பணத்தையும் ஐந்தரைப் பவுண் பெறுமதியான நகையையும் திருடிச் சென்ற 23 வயதான சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். போதைப்பொருள் பாவனைக்காகவே தான் திருடினேன் என சந்தேகநபர் ஒப்புக் கொண்டுள்ளார் எனத் தெரிவித்த பொலிஸார், நகை மற்றும் பணம் என்பன மீட்கப்பட்ட பின்னர் சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தனர். (ஒ-20)

# பயணத் திசையை மாற்றினால் நாடு பாதாளத்துக்குச் செல்லும்

## அச்சமூட்டுகிறார் வஜிர

கொழும்பு, ஏப்.17
நாடு தற்போது பயணிக்கும் பாதையை மாற்ற முற்பட்டால் மிகப் பெரிய நெருக்கடி நிலைமை உருவாகக்கூடும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன.
அவர் மேலும் தெரிவித்ததாவது-
நாட்டு மக்கள் எவரும் பட்டினியால் வாடாமல் வாழக்கூடிய சூழ்நிலையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உருவாக்குவார். மக்களின் அமோக ஆணையுடன் அவரிடம் இவ்வருடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டும். தற்போது பயணிக்கும் பாதையை மாற்ற முற்பட்டால் அழுத்தங்கள், நெருக்கடிகள் ஏற்படும். தனி ஒரு ஆளாக முழு நாட்டையும் பாதுகாக்கக்கூடிய ஆளுமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளது- என்றார். (ஒ-44)

# அதிவேக நெடுஞ்சாலை 66 பேரின் உயிர் காவு!

கொழும்பு, ஏப். 17
தெற்கு அதிவேக நெடுஞ்சாலை அமைக்கப்பட்டு இதுவரையிலான 13 வருடங்களில் 9 ஆயிரத்து 375 வாகன விபத்துகள் இடம்பெற்றுள்ளன. இந்த விபத்துகளில் 66 பேர் உயிரிழந்துள்ளனர். நெடுஞ்சாலை பாதுகாப்புச் செயற்றிட்டக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வில் இந்த விடயம் தெரிவிக்கப்படுகிறது.
இவற்றில் 5 ஆயிரத்து 282 விபத்துகள் வாகன சாரதிகளின் தவறால் இடம்பெற்றுள்ளன. 3 ஆயிரத்து 56 விபத்துகள் வாகனங்களில் விலங்குகள் மோதுவதால் மற்றும் சீரற்ற வானிலை காரணமாக இடம்பெற்றுள்ளன. இவை தவிர, வாகனங்களில் ஏற்பட்டுள்ள கோளாறுகள் உள்ளிட்ட ஏனைய காரணங்களால் 837 வாகன விபத்துகள் ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# இஸ்ரேல் தாக்குதல் 1.1 பில். டொலர் ஈரான் செலவு

கொழும்பு, ஏப். 17
இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு 1.1 பில்லியன் டொலர் செலவாகியுள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது. (ஒ-6)

# பல மில்லியன் செலவு; கைவிடப்பட்ட ராடர் திட்டம்

கொழும்பு, ஏப்.17
பொத்துவிலில் ஆரம்பிக்கப்பட்ட இயற்கைப்பேரிடரை முன்கூட்டியே அறிவிக்கும் ராடர் பொருத்தும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.
புத்தளத்திலும், பொத்துவிலிலும் இயற்கைப்பேரிடர் தொடர்பாக முன்கூட்டியே அறிவிக்கும் பொருட்டு ராடர்கள் பொருத்தும் திட்டம் ஜப்பானிய அரசின் உதவியுடன் 2017ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 523.78 மில்லியன் ரூபா திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.
370.161 மில்லியன் ரூபா செலவிடப்பட்ட நிலையில் பொருள்களின் விலை அதிகரிப்பை காரணம் காட்டி திட்டம் இடை நடுவில் நிறுத்தப்பட்டுள்ளது. ராடர்களை அமைப்பதற்கான இடத்தைத் தெரிவு செய்வதில் காணப்படும் சிக்கல் இழுபறியும் திட்டம் இடை நடுவில் கைவிடப்பட்டமைக்கான காரணங்களில் ஒன்றாகும். இப்போது புத்தளத்தில் ஒரு ராடரை மட்டும் பொருத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இதேபோல் கொங்கொலவில் 420 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட ராடர் திட்டமும் 12 ஆண்டுகள் கடந்தும் இன்னமும் பூர்த்தியாக்கப்படவில்லை. இதற்குரிய ராடர் அமெரிக்க நிறுவனத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தது. மண்ணின் மாதிரியை பரிசோதிக்காமல் ராடர் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் ராடர் அமைக்கும் உபகரணங்கள் சேதமடைந்து விட்டன. சேதமடைந்த உபகரணங்கள் திருப்பி அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இதற்கு இழப்பீடு கோருவதும் சாத்தியமற்றது என தேசிய கணக்காய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஒ-6)



# ரயில் சேவைகள் இரத்து

கொழும்பு, ஏப்.17
சாரதி மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் பணிக்குத் திரும்பாமையால் நேற்று ஆறு அலுவலக ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.
கரையோர மற்றும் பிரதான மார்க்கத்தில் இயங்கும் அலுவலக ரயில் சேவைகளே இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# கிணற்றில் தவறிவீழ்ந்த சிறுவன் சாவு

கொழும்பு, ஏப். 17
கம்பளை அம்பகமுவவில் பாதுகாப்பற்ற கிணறொன்றில் வீழ்ந்து சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 9 வயதுடைய சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான். சிறுவன் விடுமுறைக்கு பெற்றோருடன் கம்பளையிலுள்ள வீட்டுக்கு சென்றபோது இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த தலைமையே நாட்டுக்கு அவசியம்!

## பரந்துபட்ட கூட்டணி விரைவில்; முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 17**

**இந்த ஆண்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பரந்துபட்ட கூட்டணியொன்றை உருவாக்குவது தொடர்பில் ஆழமாகச் சிந்தித்து வருகின்றோம். மே அல்லது ஜூனில் இறுதி நிலைப்பாட்டை வெளிப்படுத்துவோம்.**

-இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மை தேசிய இனங்களில் ஒன்றான முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் பெரும்பான்மைக் கட்சி என்ற வகையில் இந்தத் தேர்தலில் காத்திரமான தீர்மானங்களை எடுக்கவேண்டிய தார்மீகக் கடமை எமக்குள்ளது.

நாம் தற்போது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் பங்காளியாக உள்ளோம். எனினும் தேர்தல் களத்தில் மும்முனைப் போட்டியொன்று ஏற்படும் பட்சத்தில் வரப்போகின்ற விளைவுகள் பற்றித் தீவிரமாகக் கவனம் செலுத்தியுள்ளோம்.

ஏற்கனவே சிறுபான்மை தேசிய இனங்களின் பல்வேறு விடயங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. அத்துடன் நாட்டின் நிலைமைகளை மாற்றவல்ல நிதியுதவிகளையும், உள்நாட்டு மேம்படுத்துவதற்கான வழிகளையும் கண்டறிய வேண்டும்.

இவ்விதமான விடயங்களையெல்லாம் வெளிப்படைத்தன்மையுடன் கையாளக்கூடிய தலைமையே நாட்டுக்கு அவசியமாகின்றது என்றும் குறிப்பிட்டார். (ச-இ)

கல்முனை விவகாரம்

## முஸ்லிம் - தமிழ் மக்கள் பாதிக்காதவாறே தீர்வு!

கொழும்பு, ஏப். 17

கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்துக்கு ஒரு தலைப்பட்சமாகத் தீர்வு காணமுடியாது. இதற்கு நிரந்தரத் தீர்வைக்காண தமிழ்த் தரப்புடன் மீளவும் பேச்சு நடத்துவதற்குத் தயார் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவிக்கையில்,

கல்முனை வடக்கு (தமிழ்) பிரதேசசெயலக விடயம் சம்பந்தமாக நாம் கடந்த காலங்களில் தமிழ்த் தரப்புடன் பேச்சுகளை நடத்தியிருந்தோம். எனினும் அந்தப் பேச்சுகளினூடாக நிரந்தரமானதொரு தீர்வை எட்ட முடியவில்லை.

தற்போது தமிழர்கள் தொடர்ச்சியான போராட்டத்தை ஜனநாயக ரீதியில் முன்னெடுத்து வருகின்றார்கள். கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் நிர்வாக எல்லைக்குள் 29 கிராமஅலுவலர் பிரிவுகள் தமிழர்களுக்கு உள்ளன. அதேபோன்றே 29 கிராம அலுவலர் பிரிவு முஸ்லிம்களுக்கு உள்ளன. இங்கே பிரச்சினையாக இருப்பது எல்லைகள் தான்.

எனவே மக்கள் தொகைக்கு ஏற்றவாறு எல்லைகளை மீள் நிர்ணயம் செய்வது தொடர்பில் உரிய வகையில் தமிழ்த் தரப்பும், முஸ்லிம் தரப்பும் கலந்துரையாடி தீர்மானம் எடுப்பது தான் பொருத்தமான அணுகுமுறையாக இருக்கும் - என்றார். (ச-இ)

## தேர்தல் பரப்புரைக்கு வாகன உரிமம் தருக

### எம்.பி.க்கள் கோரிக்கை

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் வரிச்சலுகை வாகன அனுமதிப்பத்திரத்தை வழங்க முடியாத பட்சத்தில் குறைந்த பெறுமதியான வாகனத்துக்காக அனுமதிப் பத்திரத்தை வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். ஆளும் மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களால் மஹிந்த யாப்ப அபேவர்த்தனவிடம் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## வீதி விபத்துகளில் இருவர் காயம்

கனகன்புளியடிச் சந்தி மற்றும் நுணாவில் சந்தி வீதிகளில் கடந்தவாரம் இடம்பெற்ற இருவேறு விபத்துகளில் இருவர் காயமடைந்தனர். மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது நாய்கள் வீதியின் குறுக்கே ஓடி மோதியதில் இந்த விபத்துகள் நடந்துள்ளன.

மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரும், மட்டுவில் வடக்கைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக உத்தியோகத்தர் ஒருவருமே விபத்தில் காயமடைந்துள்ளனர். இருவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். (எ-131)

## ஜே.வி.பி. ஆட்சிக்கு வந்தால் மக்கள் மயமான அரசாங்கம்



### நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

மக்களுடன் கலந்துரையாடி, மக்கள் மயப்படுத்தப்பட்டதாகவே தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும் என்று அக்கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பு என்பதை பலவந்தமாகத் திணிக்க முடியாது. அது தொடர்பில் மக்கள் மத்தியில் கலந்துரையாடல் மற்றும் மக்களின் ஆதரவு அவசியம். மன்னர் ஆட்சி நடைபெற்ற நேபாளத்தில்கூட மக்கள் விருப்பத்துக்கமையவே புதிய அரசமைப்பு கொண்டுவரப்பட்டது. தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்காலத்துக்குள் மக்கள் மயப்படுத்தப்பட்ட புதிய அரசமைப்பு முன்வைக்கப்படும் - என்றார் நளிந்த ஜயதிஸ்ஸ. (ஓ-44)

## புதினம் தெரியுமோ?

ஊருக்குத்தான் உபதேசம் உனக்கில்லையடி எண்டகணக்கில, மற்றவையின்ர வேலையில நொட்டையள் பிடிக்கத்தெரிஞ்ச எங்கட அரசியல்வாதியள், அதே வேலையைத் தாங்கள் செய்யேக்க, உலகத்திலயே இல்லாத புதுவிளக்கம் ஒண்டைச் சொல்லி உருட்டுவினம். அதிலையும் வீட்டுக்கட்சிக்காரர் இதில விண்ணர். அவையின்ர கட்சி மூச்சுக்கு முந்நூறுதரம் 'தமிழ்த் தேசியம்' எண்டு உச்சரிக்குது. ஆனால் அவையின்ர செயற்பாடுகள் கனக்க தமிழ்த் தேசியத்துக்கு எதிராத்தான் இப்ப நடக்குதெண்டு சனம் கதைக்குது. அதை உறுதி செய்யிற மாதிரியான ஒரு சம்பவம் நடக்கப் போகுது. நடந்த பிறகு சொல்லிறதை விடவும், நடக்க முதலே சொன்னாலாவது அதைத் திருத்தக்கூடும் எண்ட நப்பாசை பட்சிக்கு.

கிளிநொச்சிக் கச்சேரிக்கு முந்தி பொறுப்பா இருந்த அம்மணிக்கு முழுநேர வேலையே, வீணைக்காரருக்கு தாளம் போடுறதுதான். வீணைக்காரரின்ர கொள்கை என்னவெண்டு உங்கள் எல்லாருக்குமே நல்லாத் தெரியும் 'மத்தியில தேங்காய் மாநிலத்தில மாங்காய்' எண்டு சொல்லிக்கொண்டு, தமிழ்த் தேசியத்துக்கு எதிரான வேலையளைச் செய்யிறதுக்குத்தான் ஒவ்வொரு அரசாங்கமும் அந்தக் கட்சிக்கு அமைச்சர் பதவியைத் தூக்கி எறியிறது. வாங்கின பதவிக்கு வீணைக்காரரும் வஞ்சகம் செய்யிறேலை. அவையின்ர தமிழ்த்தேசிய ஒழிப்பில ஒரு திட்டம், நினைவேந்தல்களைக் குழப்பிறது. அதை நேரடியாக் குழப்பினால் சனம் தங்களோட குழம்பும் எண்டதால, பின்பக்கமா சில அலுவல்கள் பாப்பினம். அதில ஒண்டுதான், முக்கியமான நினைவேந்தல்கள், போராட்டங்கள், ஹர்த்தால்கள் நடக்கப்போறதா அறிவிச்ச திகதியளில மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களை வைப்பினம். அந்தக் கூட்டத்துக்கு தமிழ்த்தேசியம் கதைக்கிற எம்.பி.மார் போனால், அவை நினைவேந்தலிலையோ போராட்டத்திலையோ கலந்துகொள்ள ஏலாமல் போடும். அப்பிடியில்லாமல் போராட்டத்துக்கோ, நினைவேந்தலுக்கோ தமிழ்த்தேசிய எம்.பி. மார் போனால், அவையில்லாத நேரத்தில தங்களுக்கு ஏத்தமாதிரி தீர்மானங்களை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில வீணைக்காரரும், அந்த முன்னாள் கச்சேரி அம்மணியும் எடுக்கலாம். இதுதான் அவையின்ர திட்டம். திலீபன்ர நினைவேந்தல், கொக்குத்தொடுவாய் புதைகுழிக்கு நீதிகோரி நடத்தின ஹர்த்தால் நாளுகளில இப்பிடியெல்லாம் கூட்டம் போட்டவை.

அப்பிடி அந்த அம்மணியும், அமைச்சரும் கூட்டம் போட்டதுக்கு தமிழரசுக்கட்சி கடுமையாக் கொதிச்சது. வேற நாளில கூட்டத்தை வைக்கச் சொல்லி தமிழரசுக் கட்சி எம்.பி.மார் கடிதங்களும் எழுதினவை. இப்ப என்னெண்டால், அதே தமிழரசுக் கட்சிக்காரர் அன்னை பூபதியின்ர நினைவேந்தல் நாளில (இந்த மாதம் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை) தங்கட மத்திய குழுக்கூட்டமொண்டை வவுனியாவில வைக்கப்போறதா அறிவிச்சிருக்கினம். சத்தியமே இல்லாத லிங்கத்தாருக்குத்தான் தமிழ்த் தேசியச் சுரணை இல்லையெண்டு விட்டாலும், மாவையருக்கு அன்னைபூபதியின்ர நினைவுநாளில கூட்டம் வைக்கிறது சரியில்லை எண்டு தெரியாதோ. கட்சியே கவிண்டு கொட்டுண்டு கிடக்கேக்க, உந்த உப்புச்சப்பில்லாத மத்திய குழுக் கூட்டத்தை ஒருநாள் பிந்தியோ முந்தியோ வைச்சால் என்ன குடியோ முழுகிப்போடும்? இப்ப அன்னைபூபதியையே மறந்து கூட்டத்தை வைக்கிறவை, கொஞ்ச நாளில எலக்சன் எண்டவுடன தமிழ்த்தேசியம் தங்கட உயிர் எண்டு வாக்குக்கேக்க வரேக்க, சனத்திட்ட வாங்கிக்கட்டவும் ரெடியா இருக்கோணும்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரோதி : புதுவருட பலன்கள்



## மேஷம்

புரட்சிகரமான தொலைநோக்குத் திட்டங்கள் தீட்டுவதில் வல்லவர்களே! பூர்வ புண்யாதிபதி சூரியன் உங்கள் ராசியிலேயே உச்சமடைந்திருக்கும் நேரத்தில் இந்தாண்டு பிறப்பதால் தடைப்பட்டு வந்த விடயங்கள் நல்ல விதத்தில் முடியும். புது வாய்ப்புகள் தேடி வரும்.

நட்பு வட்டம் விரிவடையும். உங்களின் சுகஸ்தானாதிபதியாகிய சந்திரன் ராசிக்கு 3 ஆம் வீட்டில் அமர்ந்திருக்கும்போது இந்த தமிழ்ப் புத்தாண்டு பிறப்பதால் புதிய முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும்.

இந்த வருடம் முழுக்க கேதுபகவான் உங்கள் ராசிக்கு 6ஆம் வீட்டில் நிற்பதால் ஆரோக்கியம் மேம்படும். மனதில் ஒரு வித தெம்பு, தைரியம் இருக்கும். ராகுவும் உங்களுக்கு ராசிக்கு 12ஆம் வீட்டில் அமர்ந்திருப்பதால் தீராத கடன்களுக்குத் தீர்வு கிடைக்கும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும்.

30.04.2024 வரை ராசியிலேயே குரு அமர்ந்து ஜென்ம குருவாகத் தொடர்வதால் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். 01.05.2024 முதல் வருடம் முடியும் வரை உங்கள் ராசிக்கு குரு 2ம் வீட்டில் சென்று அமர்வதால் தடைப்பட்டிருந்த சுப நிகழ்ச்சிகளெல்லாம் அடுத்தடுத்து நடந்தேறும். இந்த குரோதி வருடம் முழுவதுமாக உங்கள் ராசிக்கு சனிபகவான் லாப வீட்டிலேயே தொடர்வதால் திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் வரும். எதிலும் ஆர்வம் பிறக்கும். வருமானம் உயரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நியாயமான சலுகைகள், உரிமைகளைக் கூடப் போராடிப் பெறவேண்டி வரும். கார்த்திகை, பங்குனி மாதங்களில் சம்பள உயர்வு உண்டு. இந்தக் குரோதி வருடம் நீங்கள் கையில் எடுத்த காரியங்கள் அனைத்திலும் உங்களை வெற்றிபெற வைக்கும்.




# வவுனியா சென்றடைந்தது அன்னைபூபதியின் ஊர்தி

வவுனியா, ஏப். 17

நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதியின் 36ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு கடைப்பிடிக்கப்பட்டுவரும் நிலையில் அவரின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி வவுனியாவை நேற்று வந்தடைந்த நிலையில் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த அன்னைபூபதியின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி வடக்கு, கிழக்கின் அனைத்து மாவட்டங்களுக்கும் செல்லவுள்ள நிலையில் வவுனியாவை நேற்று வந்தடைந்தது.

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டப் பந்தலுக்கு முன்பாக அஞ்சலிக்காக நிறுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்துபொங்கு தமிழ் நினைவுத்தூபி, பண்டாரவன்னியன் நினைவு சதுக்கம், கோவில்குளம், ஈச்சங்குளம், வவுனியா வடக்கு உள்ளிட்ட பல பகுதிகளுக்குச் சென்றதுடன், அஞ்சலி நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஒ-18)

# ஜனாதிபதி வேட்பாளர்; விரைவில் முடிவு

## விஜயதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 17

ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராகக் களமிறங்குமாறு முன்வைக்கப்பட்டுவரும் கோரிக்கைகள் தொடர்பில் இன்னும் ஓரிரு வாரங்களுக்குள் தீர்மானமொன்று எடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குமாறு பல தரப்பினரும் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள், அதேபோல மகா சங்கத்தினர் மற்றும் ஏனைய மதத்தலைவர்கள் ஆகியோரும் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் சிந்தித்து, நன்கு ஆராய்ந்து அடுத்த சில வாரங்களில் தீர்மானமொன்றை எடுக்கவுள்ளேன்.

எமது நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை. எனவே, கட்சியைப் பார்த்து வாக்களிப்பதைவிட, நபர்கள் மற்றும் கொள்கைகளுக்கு முன்னுரிமையளித்தே இனி வாக்களிப்பார்கள்- என்றார். (ஒ-44)

# மேடையை உடைத்த ரயில்; சாரதியின் பணி இடைநிறுத்தம்

கொழும்பு, ஏப்.17

ரயில் ஒன்று ரயில் மேடையை உடைத்துச் சேதங்களை ஏற்படுத்தியிருந்த நிலையில், அந்த ரயிலின் சாரதி பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என்று ரயில்வே திணைக்களப் பிரதி முகாமையாளர் என். ஜே. இதிபொல தெரிவித்துள்ளார். (எ-இ)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் ஏப்.17

வடஇலங்கை சமாதான நீதிவான் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம், கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் தலைவர் கா.பீ. ஜெயவிந்தன் தலைமையில், எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் அனைத்துச் சமாதான நீதிவான்களையும் கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (ப-9)

# ஓ.எம்.பி. அலுவலகம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஏப்.17

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் கடந்த பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் உள்ள புதிய கட்டடத் தொகுதியின் 3 ஆம் மாடியில் இயங்கி வருகின்றது.

இந்த அலுவலகம் முன்னர் கல்வியங்காடு, ஆடியபாதம் வீதியில் இயங்கிவந்த நிலையில், கடந்த பெப்ரவரி மாதம் முதல் புதிய அலுவலகத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும். நண்பர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வியாபாரத்தில் விற்பனை சுமாராக இருக்கும்.

**இடபம்:** அனுகூலமான நாள். சகோதரர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும். உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியம் இழுபறியாகி முடியும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும். சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். குரு வழிபாடு நலம் சேர்க்கும்.

**கடகம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வியாபாரத்தில் பணியாளர்களால் வீண்செலவுகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வியாபாரத்தில் கனிவான அணுகுமுறை அவசியம்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். உதவி கிடைப்பது தாமதமாகும். கடன் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**துலாம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். முக்கியமான முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். செலவுகள் அதிகரித்தாலும்சமாளித்துவிட முடியும். உறவுகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**விருச்சிகம்** : மகிழ்ச்சி தரும் நாள். கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருக்கும் பிணக்குகள் நீங்கும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். முருகப்பெருமானை வழிபட நன்மைகள் உண்டாகும்.

**தனுசு:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். கணவன் – மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும். நண்பர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். காரியம் இழுபறியாகும். புதிய முயற்சிகள் மேற்கொள்வதைத் தவிர்க்கவும்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். அலைச்சல் ஏற்படக்கூடும். சங்கடங்கள் ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. ஆரோக்கியம் மேம்படும். விற்பனை சற்று மந்தமாகத்தான் இருக்கும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. சில பிரச்சினைகள் ஏற்படலாம். பாதிப்பு எதுவும் இருக்காது. தட்சிணாமூர்த்தியை வழிபடுவது நன்று.

**மீனம்:** எதிலும் பொறுமை அவசியம். புதிய முயற்சிகள் இழுபறியாகும். அடிக்கடி மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளின் தேவையை நிறைவேற்ற சிறிது அலைய வேண்டியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி சக்தியம்மன் வித்தியாலயத்துக்கு ஒளிப்படப் பிரதி இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. பாடசாலையின் பழைய மாணவி திருமதி பாக்கியராஜா மந்தாகினி குடும்பத்தினர் இயந்திரத்தை வழங்கினர். (எ-9)



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, சாவகச்சேரி சந்தையில் புடைவை வியாபாரம், கடந்த சனிக்கிழமை களைகட்டியிருந்தது. (ப-9)







கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பன்னிரண்டு மாத விளக்கு வேலைத் திட்டத்தின் கீழ், சித்திரைப் புத்தாண்டு மருத்துநீர் வைக்கும் உற்சவம் கோண்டாவில் தென்கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (எ-66)



கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் மற்றும் குமரன் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் ஆதரவில் இயங்கும் குட்டிச்சுட்டி முன்பள்ளிச் சிறார்களின் சிறுவர் சந்தை நிகழ்வு சனசமூக நிலையத் தலைவர் து.சுதன் தலைமையில், கோண்டாவில் சந்தியில் அமைந்துள்ள கடைத்தொகுதியில் அண்மையில் நடைபெற்றது. (எ-66)

றமழான் மாதத்தை முன்னிட்டு மன்னார் புதுக்குடியிருப்பு ஜும்மா பள்ளிவாசலில் இப்தார் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக மன்னார் மாவட்டச்செயலர் கே.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் பிரதேச செயலாளர் மா.பிரதீப், மன்னார் மறைமாவட்ட ஆயரின் பிரதிநிதி தோட்டவெளி பங்குத் தந்தை அருட்பணி தமிழ் நேசன் அடிகளார், சாந்திபுரம் பௌத்த மதத் தலைவர், பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள், திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-60)






மன்னார் நகர் பிரதேச செயலகப் பிரிவில் இந்த ஆண்டுக்கான கலைஞர் ஒன்றுகூடலும், கலாசாரப் பேரவை புதிய நிர்வாகத் தெரிவும் மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் தலைமையில் மன்னார் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. (எ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அனலைதீவு, பெரியபுலம் ஸ்ரீ சங்கரநாதர் மகாகணபதிப் பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா, கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ப-9)





பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம், முகமாலை புதிய இளந்தென்றல் விளையாட்டுக் கழகம், கலாமன்றம், சிகரம் சிறுவர் சமூகம் மற்றும் ஞான வைரவர் அறநெறிப் பாடசாலை என்பன இணைந்து ஏற்பாடு செய்த சித்திரைப் புத்தாண்டு பாரம்பரிய கலாசார விளையாட்டுப் பெருவிழா, முகமாலை சிவபுர வளாகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலக உதவிச் செயலர் திருமதி ஹ.சத்தியஜீவிதா கலந்துகொண்டார். (ப-9)




கோண்டாவில் கிழக்கு, ஸ்ரீ மகாகாளி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (ப-66)




சாவகச்சேரி நகர், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், கைவிசேடம் வழங்கும் நிகழ்வு, சாவகச்சேரி ஐங்கரன் மணி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. தொடர்ந்து, சங்கத்தின் மாதாந்தக் கூட்டம், சங்கத் தலைவி தலைமையில் நடைபெற்றது. (ப-9)



பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் குரோதிப் புதுவருடக் கைவிசேடம் வழங்கும் நிகழ்வு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. (எ-66)



யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழகத்தின் ஏற்பாட்டில், சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டுக் கைவிசேடம் வழங்கும் நிகழ்வு யாழ்.மாவட்டச் செயலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன், மாவட்டச் செயலக அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (எ-66)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ப-66)



சுழிபுரம் தொல்புரத்தில் அமைந்துள்ள சிவபூமி முதியோர் இல்லத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவு விழா முதியோர் இல்லத்தின் பாலச்சந்திரன் அரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (எ-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இனநலனா? ஒற்றுமையா?

இலங்கையில் தமிழர்களுக்கு மாத்திரமல்லாமல் முஸ்லிம்களுக்கும் தாய்மொழி தமிழ்தான். இதனாலேயே தமிழர்களையும் முஸ்லிம்களையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் தந்தை செல்வா ஈடுபட்டார். இதனால் 'தமிழ்பேசும் மக்கள்' என்ற சொல்லை தந்தை செல்வா பாவிக்கத்தொடங்கினார். இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொட்டு இரு தரப்பு அரசியல்வாதிகளும் தமிழ் - முஸ்லிம் ஒற்றுமை பற்றிப் பேசி வருகின்றனர். தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளும் பல விட்டுக்கொடுப்புகளைச் செய்து தமிழ் - முஸ்லிம் ஒற்றுமையை கட்டியெழுப்ப அன்றிலிருந்து இன்று வரை பாடுபட்டு வருகின்றனர். ஆனால் முஸ்லிம்களோ மொழிரீதியான பிணைப்பைக் கணக்கிலேயே எடுப்பதில்லை. அவர்கள் எப்போதுமே தம்மைத் தனியான இனமாக முன்னிறுத்துவதிலும், தமது நலன்களைப் பெற்றுக்கொள்வதிலுமே கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். ஒரு சிறுபான்மை இனம் என்ற அடிப்படையில், முஸ்லிம்கள் தமது நலன்களை முன்னுரிமைப்படுத்திச் செயற்படுவதில் எவ்விதத் தவறுமில்லை என்று தமிழர்கள் கடந்துசென்றுவிடலாம். ஆனால், ஒரே மொழியைப்பேசிக்கொண்டு, சகோதர இனம் என்று சொல்லிக்கொண்டு, தமிழர்களை ஒடுக்கும் செயற்பாடுகளை முஸ்லிம்கள் மேற்கொள்வதைத்தான் ஜீரணிக்க முடியாமல் இருக்கின்றது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் கல்முனையில் முஸ்லிம்கள் தமிழர்களின் இருப்பை கேள்விக்குறியாக்கும் செயற்பாடுகளை காலாதிகாலமாக மேற்கொண்டு வருகின்றனர். இதனால் கல்முனைத் தமிழர்கள் சாட்சிக்காரனின் காலில் வீழ்வதை விட சண்டைக்காரனின் காலில் வீழ்வதே மேல் என்ற நிலைப்பாட்டுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இலங்கைத்தீவை நிர்வகிப்பதற்கு 256 பிரதேச செயலர் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த 256 பிரதேச செயலகங்களின் ஊடாக அந்தந்தப் பிரதேசத்துக்குரிய மக்கள் தமது தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றனர். இப்படிப்பட்ட நிலையில், கல்முனைப் பிரதேச செயலர் பிரிவில் முஸ்லிம் பிரதேச செயலர்களே தொடர்ச்சியாக நியமிக்கப்பட்டு வந்தனர், வருகின்றனர். இவர்கள் முஸ்லிம்களுக்குச் சார்பாக நடந்து கொள்வதாக தமிழர்கள் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டி வந்தனர். இதனால் கல்முனை பிரதேச செயலர் பிரிவு 1989 ஆம் ஆண்டு முஸ்லிம் பிரிவு, தமிழ்ப் பிரிவு என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இவ்வாறு கல்முனைப் பிரதேச செயலர் பிரிவு இரண்டாகப் பிரிக்கப்பட்டபோது முஸ்லிம் பிரதேச செயலர் பிரிவு முழு அதிகாரத்துடன் செயற்படத் தொடங்கியது. தமிழ்ப் பிரிவுக்கு முழுமையான அதிகாரங்களை வழங்க விடாமல் முஸ்லிம் அரசியல்வாதிகள் சிங்கள ஆட்சியாளர்களுக்கு அழுத்தம்கொடுத்தனர், இப்போதும் அதே அழுத்தத்தைக் கொடுத்து வருகின்றனர். கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகம் 'உதவி அரசாங்க அதிபர் பிரிவு' என்றே இன்றுவரை அழைக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் அதன் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையை உள்ளார்ந்தமாக உணரலாம்.

தமிழ்ப் பிரிவுக்குரிய காணி, நிதி போன்ற விடயங்கள் முஸ்லிம் பிரிவின் கீழேயே உள்ளன. இலங்கை அரசியலில் பௌத்த பிக்குகள்தான் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குகின்றனர். அப்படியிருந்தும் ஞானசார தேரராலோ, சுமணரத்ன தேரராலோ கல்முனை தமிழ் பிரதேச செயலர் பிரிவை தரமுயர்த்த முடியவில்லை. சுமணரத்ன தேரர், ஞானசாரதேரர் ஆகியோரை விட முஸ்லிம் அரசியல்வாதிகளின் செல்வாக்கு கொழும்பு அரசியலில் கூடுதலான தாக்கம் செலுத்துகிறது என்பதே யதார்த்தம்.

கல்முனைப் பிரதேச செயலக தமிழ்ப் பிரிவை பூரண அதிகாரமுள்ள பிரதேச செயலகமாக தரமுயர்த்தக்கோரி கடந்த 35 வருடங்களாக கல்முனைத் தமிழர்கள் பல்வேறு சாத்வீகப் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர். எனினும் இன்றுவரை கல்முனை தமிழர்களுக்கு நீதி கிட்டவில்லை. இந்த வருடமும் தமிழ்ப் புத்தாண்டை கல்முனைத் தமிழர்கள் கரிநாளாக அனுஷ்டித்தனர். இந்த நிமிடம் வரை கொட்டும் மழைக்கு மத்தியிலும் கல்முனைத் தமிழர்கள் தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இறுதியாக நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாணத்தில் கூடுதலான ஆசனங்களைப் பெற்றிருந்தும், கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை முஸ்லிம் காங்கிரஸுக்கு தாரைவார்த்துக்கொடுத்தது. கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டதும் முதலமைச்சர் அஹமட் நஸீர் 'வடக்கையும் கிழக்கையும் இணைப்பதற்கு தான் ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன்' என்று அறிக்கைவிட்டு, தமிழர்களின் அடிப்படைக்கோரிக்கையையே நிராகரித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் பதவிக்கு வந்த முதல்மைச்சரான நஸீர். யுத்தம் நடைபெற்ற காலத்திலும் யுத்தம் முடிந்த பின்னரும் தமிழர்களுக்கு கிடைக்கவேண்டிய வேலை வாய்ப்புகள், உயர்கல்வி வசதிகள் போன்றவற்றை தமிழ்மொழியை பேசுகின்ற காரணத்தால் முஸ்லிம்கள் தட்டிப்பறித்து வருகின்றனர் என்றொரு குற்றச்சாட்டு பொதுவாக உண்டு. ஆனால், ஒரு பிரதேசசெயலகத்தைக் கூட தரமுயர்த்த அனுமதிக்காமல், இன்னொரு சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளைக் கூடவா தட்டிப்பறிப்பார்கள்? தமிழ் அரசியல்வாதிகள் தீர்க்கமான ஒரு முடிவெடுக்கவேண்டிய தருணம் வந்து விட்டது. தமிழ் - முஸ்லிம் ஒற்றுமை என்றைக்கும் இருக்கத்தான் வேண்டும். ஆனால் அதைச் சொல்லிச் சொல்லியே முஸ்லிம்கள் எல்லாவற்றையும் பறித்தெடுக்க, நாம் மட்டும் இலவு காத்த கிளிகளாக ஏமாந்து கொண்டே இருக்கிறோம். இனியும் அவ்வாறான விட்டுக்கொடுப்பு களுக்கு இடமளிக்காமல், முதலில் தமிழர் நலன் அதன்பின்னரே தமிழ்-முஸ்லிம் ஒற்றுமை என்ற நிலைப்பாட்டுக்கு தமிழ்மக்களும், தமிழ் அரசியல்வாதிகளும் வரவேண்டும். அப்போதுதான் எஞ்சியவற்றை யாவது இழக்காமல் காக்க முடியும்.





# கடன் மறுசீரமைப்பு இழுபறியில் பேச்சு!

**கொழும்பு, ஏப். 17**

**கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட பேச்சு வெற்றியளிக்கவில்லை என்று ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார். கடன் கொடுநர்களுடன் லண்டனில் நடைபெற்ற பேச்சின்போது நான்கு விடயங்கள் பேசப்பட்டன. இதில் இரண்டு விடயங்கள் தொடர்பில் இன்னமும் இணக்கப்பாடு காணப்படவில்லை.

அதேவேளை இலங்கை அண்மையில் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட அனைத்து சர்வதேச கடன் கொடுநர்களும் திருப்தி வெளியிட்டுள்ளனர் என்றும் சாகல ரத்நாயக்க தெரிவித்தார். (ச-இ)

## பாதாளக்குழு உதவியாளர் கைது

கொழும்பு. ஏப். 17

பாதாள உலகக் குழுவின் உதவியாளர் ஒருவர் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடமிருந்து 526 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார். (ச-இ)

## 3 நாள்களில் 167 விபத்துகள்

*23 பேர் உயிரிழப்பு!*




கடந்த 3 நாள்களில் 167 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. அதில் 23 பேர் உயிரிழந்துள்ளனர். 134 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பண்டிகைக் காலங்களில் இடம்பெறும் வீதி விபத்துகளின் எண்ணிக்கை இம்முறை அதிகரித்துள்ளது. திடீர் விபத்துகள் காரணமாக மருத்துவமனைக்கு வருவோரின் எண்ணிக்கை கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இந்த வருடத்தில் குறைவடைந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## திறைசேரி உண்டியல்கள் ஏலவிற்பனை

78 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் இன்று ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அதன்படி 91 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 30 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள், 182 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 25 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் மற்றும் 364 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 23 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளன- என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## தஸநாயக்கவின் வாகனம் தீவிபத்து

கொழும்பு. ஏப். 17

இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்கவின் வாகனம் நேற்று அதிகாலை திடீரென தீப்பற்றி எரிந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இராஜாங்க அமைச்சர் பண்டாரவளை ஹல்பே பகுதியில் பயணித்தபோதே இந்த விபத்து நடந்துள்ளது.

தீ விபத்தால் அமைச்சருக்கோ அல்லது சாரதிக்கோ காயங்கள் ஏற்படவில்லை என்றும் தீயணைப்புப் பிரிவினர் தீயை அணைக்கும் பணிகளில் ஈடுபட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

**நாளை**

18.04.2024

**வியாழக்கிழமை**

**சித்திரை - 05**

சுபநேரம் : 07.33 - 09.03

[illegible] - 03.03

**நாளொரு நல்வார்த்தை**

**தோல்விகளை வீழ்த்துவதே வாழ்க்கை, வெற்றியை மட்டும் கொண்டாடுவதில்லை வாழ்க்கை.**

**— சேகுவேரா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பட்லர் அதிரடியான சதம்: ராஜஸ்தான் த்ரில் வெற்றி!

கொல்கத்தா, ஏப். 17

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், ஜொஸ் பட்லரின் அதிரடியான சதம் கைகொடுக்க கொல்கத்தாவை வீழ்த்தியது ராஜஸ்தான்.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தாவுக்கு ஆரம்ப வீரர்களாக பில் சோல்ட் மற்றும் நரைன் இருவரும் களமிறங்கினார்கள். ஆரம்பம் முதலே அதிரடி காட்ட வேண்டும் என்ற தனக்கான பொறுப்பை நரைன் கச்சிதமாகக் கைக்கொண்டார். பில் சோல்ட் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும் வழக்கம்போல் பதற்றத்தை தன்னில் ஏற்றிக்கொள்ளாமல் அதிரடியைத் தொடர்ந்தார் நரைன். 29 பந்துகளில் நரைனின் அரைச்சதம் பதிவானது. ஸ்ரேயஸ் மற்றும் ரசல் இருவரும் சோபிக்கவில்லை. ஆனால் ரிங்கு சிங் 9 பந்துகளில் 20 ஓட்டங்களைச் சேர்த்தார். ஒருமுனை பலவீனமாக இருந்தாலும் மறுமுனையில் கட்டுக்கடங்காத அதிரடிகாட்டி 49 பந்துகளில் சதம் கடந்தார் நரைன். 109 ஓட்டங்களுடன் நரைனின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. முடிவில் 6 விக்கெட்களை இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றது கொல்கத்தா.

பதிலுக்கு களமிறங்கிய ராஜஸ்தான் அணிக்கு ஆரம்ப வீரர் ஜெய்ஸ்வால் 19 ஓட்டங்களுடன் ஏமாற்றினார். அணித் தலைவர் சாம்சன் 12 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினாலும் ரியான் பராக் மற்றும் பட்லர் இணை இலக்கை எட்டக்கூடிய வகையில் நம்பிக்கையுடன் விளையாடியது. 14 பந்துகளில் 34 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார் ரியான். ஜூரல் 2, அஸ்வின் 8, ஹெட்மயர் பூச்சியம் என அடுத்தடுத்து ஏமாற்றினாலும் மறுமுனையில் பட்லர் நம்பிக்கை கொடுத்துக் கொண்டிருந்தார். றோமன் பவல் 13 பந்துகளில் 26 ஓட்டங்களைப் பெற ராஜஸ்தானின் வெற்றிக்கு வாய்ப்புகள் இருக்கவே செய்தன. இறுதி மூன்று ஓவர்களையும் முழுமையாக எதிர்கொண்டார் பட்லர். மறுமுனையால் இலக்குகள் சரிந்துவிட்டதால் அடித்தாடக்கூடிய வீரர் இல்லை என்பதால் இந்த நுட்பத்தை அவர் கைக்கொண்டார். சிக்சர், பவுண்டரி என விளாசி சதம் கடந்த பட்லர் இறுதிப் பந்தில் அணியை வெற்றி பெறவும் வைத்தார். 60 பந்துகளில் 107 ஓட்டங்களுடன் பட்லர் ஆட்டமிழக்காதிருந்தார். (ம)


# மரண அறிவித்தல்



## அமரர் சண்முகவேல் அருட்செல்வன்

கொழும்பு ஜிந்துப்பிட்டி கண்ணா தெருவை பிறப்பிடமாகவும் , 216 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சண்முகவேல் அருட்செல்வன் அவர்கள் (2024.04.16) நேற்று செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற சண்முகவேல்-பகவதியம்மாள் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராஜன்-மாரியம்மாள் தம்பதியரின் அன்பு மருமகனும் கிருஸ்ணவேணியின் பாசமிகு கணவரும், சுமதி, (கொழும்பு), ஸ்ரீதரன் (நகைதொழில் கொழும்பு), ஜெகதீஸ்வரி (கொழும்பு), அரவிந்தநாதன் (தச்சுவேலை கொழும்பு), ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவசுப்பிரமணியம் (கொழும்பு), விஜிதா (கொழும்பு), அசோக்குமார் (கொழும்புத்துறைமுகம்),சுபாசினி (கொழும்பு), கதிரேசன், பொன்ராஜன், பொன்குமார் (பொன்னா இரும்பகம், யாழ்ப்பாணம்), பானுமதி (இந்தியா), தனலக்சுமி (இந்தியா), பொம்மியம்பாள் (இந்தியா), பொன்ராணி (கணக்காளர் கொழும்பு), ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் துவா அஞ்சலி, நிதிஹா, தனுசிகா, நகுல்ராஜ், நவீன், நித்திகா, ஆகியோரின் பெரிய தந்தையும், ரிஷிகேஸ், கிறஷித், லோகித், ஆகியோரின் தாய்மாமனும், கார்த்தீபன், கௌதமி, காவியஸ்ரீ, நந்தன்ஸ்ரீ, கார்னியா, வெங்கடேஸ்வரன் ஆகியோரின் சிறியதந்தையும் நதிஸ்வரன், அபிஷாயினி, சாயிஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.04.2024) புதன்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

மலர்வு 18.08.1971

உதிர்வு 16.04.2024

இல: 102 சிவன்கோயில் வடக்கு வீதி யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| மனைவி | : 077 191 2166 |
| மைத்துனர் | : 077 582 6793 |
| தம்பி | : 076 621 5317 |
| அக்கா | : 076 559 5827 |

(CS 226) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவின்
நோக்கம்
மகிழ்ச்சியை
தக்கவைப்பதல்ல.
வலியை
நீக்குவதே
அரிஸ்டோட்டில்

புதன் பொய்கை

17.04.2024
புதன்கிழமை

அ.ஈழம் சேகுவேரா
*சிவில் சமூக மனித உரிமைகள் செயற்பாட்டாளர்*

# தண்ணீருக்கான அல்லாட்டம் அபிவிருத்தி என்றாகாது!



அரசியல்வாதிகளும், அந்த அரசியல்வாதிகள் சீழ் நிரம்பிய கொப்புளங்களை முலை என்று சொல்லி சப்பச்சொன்னால், அதனை நம்பி சப்பிக் குடிக்கத் தயாராகவிருக்கும் அரச நிர்வாக சேவை அதிகாரிகளும் அபிவிருத்தியின் வரைவிலக்கணத்தை முதலில் கற்றுத்தெளிய வேண்டும். தேர்தல் வாக்குகளுக்காகவும், அரசாங்க உத்தியோகம், அரசாங்க சம்பளப் பணம், உத்தியோகத்தில் பதவி உயர்வு, வயசு போன காலத்தில் ஓய்வூதியத்துக்காகவும் மண்ணை, மணலை, மலையை, நீரை, கடலை, காட்டை, காற்றை, கனிமவளத்தை அள்ளி விற்றுத்தின்று, வயிறு வளர்த்து, ஏப்பம் விடுவதல்ல அபிவிருத்தி! ஒரு பூவுக்குச் சேதாரம் இல்லாமல் தேனீ எப்படி தேன் குடிக்கிறதோ, அதுபோலவே இந்த இயற்கையையும் சூழலையும் நுகர்ந்து, பராமரித்து அடுத்த தலைமுறைப் பிள்ளைகளுக்கும் பாதுகாப்பாக வைத்துவிட்டுப் போவதற்குப் பெயர்தான் அபிவிருத்தி! இரணைமடுக்குளத்திலும், முத்துஐயன்கட்டுக் குளத்திலும், வவுனிக்குளத்திலும், பாவற்குளத்திலும், கட்டுக்கரைக்குளத்திலும் தேவையான அளவு தண்ணீர் இருக்கிறது என்றுசொல்லி, அங்கு தொழிற்சாலை அமைத்து எவ்வளவுக்கு எவ்வளவு தண்ணீரை உறிஞ்ச முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு தண்ணீரை உறிஞ்சி, வியாபாரம் செய்யுங்கள் என்று குளிர்பானக் கம்பனிகளுக்கு அனுமதி கொடுத்துவிட முடியுமா என்ன? அதுபோல, பூநகரி பொன்னாவெளியில் தேவையான அளவு சுண்ணக்கல் இருக்கிறது என்றுசொல்லி, சுண்ணக்கல் அகழ்ந்து சிமெந்து உற்பத்தித் தொழிற்சாலை அமைக்கலாம் என்ற முடிவுக்கு வருவது என்னவொரு அறிவிலித்தனம்! மக்கள் வசிக்கவில்லை, நீரைப்பெறும் ஆதாரங்கள்கூட இல்லை. ஆனால், பாலைவன நாடுகளில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரைக்கும் மணல் திட்டுகளும், மணல் அடுக்குகளும்தான் இருக்கின்றன என்பதற்காக, அந்த நாடுகள் மணலை அள்ளி விற்பதையே ஒரு தொழில்துறையாக மாற்றிக் கொண்டு, மணலை விற்றுத்தின்று தமது வயிற்றை வளர்ப்பதாக நீங்கள் எங்காவது செய்திகளில் அறிந்ததுண்டா?



## வரலாற்றுத் தவறு

ஏற்கனவே ஜீ.ஜீ.பொன்னம்பலம் என்ற ஒரு அரசியல்வாதி காங்கேசன்துறையில் அமைத்த சிமெந்துத் தொழிற்சாலையால் தமிழர் தேசத்தின் மண்வளமும், நீர்வளமும் பாழ்பட்டுப்போன நிலைமைகள் போதும்! அவரது அன்றையகால தூரநோக்கற்ற அரசியல் சிந்தனையால், காலப்போக்கில் கடல்நீர் உட்புகுந்து இன்று யாழ்ப்பாண மாவட்டத்தின் வடக்கில் ஒருபகுதி மக்கள் சுகாதாரமான, பாதுகாப்பான குடிதண்ணீரின்றி இன்றி துன்பப்படுகின்றனர். நாளாந்தம் தூய நீருக்காக போராடிக்கொண்டிருக்கும் ஒரு தொகுதி மக்களையும் நம்மிடையே காண்கிறோம். அந்த மக்களைப் பொறுத்த வரைக்கும் தூயநீரைப் பெறுவதற்கான போராட்டமே, ஒரு வாழ்க்கைமுறையாகவும் மாறிப்போயிருக்கிறது. இதுவொரு ஈடுசெய்துவிட முடியாத அவலநிலை! அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்புகள் என்று கூறப்படும் கவர்ச்சிப்பொறியின் விளைவுகள். 60 ஆண்டுகள் காலவோட்டத்துக்குப் பின்னர் தமிழர் தேசத்துக்கு எவற்றைத் தந்துவிட்டுப் போயிருக்கின்றன என்று வரலாற்று அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்ளுங்கள். தூய நீருக்கு அதுவும் குடிநீருக்குப் பிச்சை எடுக்கும் ஒரு மக்கள் கூட்டத்தையே அவை உருவாக்கிவிட்டிருக்கின்றன. இனவழிப்புப் போர் காரணமாக மக்கள் அங்கிருந்து இடம்பெயர்க்கப்பட்டு சென்றபின்னர், 25 ஆண்டுகளுக்கும் மேலாக அப்பகுதி ஓர் இராணுவ உயர் பாதுகாப்பு வலயம்! அங்கே, உள்ளே என்ன நடக்கிறது? என்று தகவல் அறிய பொதுசனங்கள் எவருக்கும் வாய்ப்பிருக்கவில்லை, உரிமையும் இருக்கவில்லை. ஏன் என்று காரணம் கேட்டபோது, தேசியப் பாதுகாப்புக்கான இரகசியம் என்றார்கள் படைத்துறையினர். ஆனால், உள்ளே என்ன நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது? வரையறுக்கப்பட்ட ஆழத்தையும் தாண்டி சுண்ணக்கற்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டு கடத்திக் கப்பல்களில் கொண்டு செல்லப்பட்டுள்ளன. தொழிற்சாலை இயந்திரங்களும் களவாடி இரும்புக்காக விற்பனை செய்யப்பட்டுள்ளன. கட்டுப்பாடுகளின்றி சுண்ணக்கற்கள் அகழ்ந்தெடுக்கப்பட்ட அங்கிருக்கும் ஆழமான கிடங்குகளை, இன்று யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைகளின் தலைமையகமும், வலிகாமம் வடக்குப் பிரதேச சபையும் மனித மற்றும் மாமிச கழிவுகளாலும், மருத்துவமனைக் கழிவுகளாலும் (பலாலி இராணுவ மருத்துவமனை, தெல்லிப்பழை பொதுமருத்துவமனை) நிரப்பிக்கொண்டிருக்கின்றன. சுண்ணக்கற்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டு நன்னீர் வளம் உவர்நீராக்கப்பட்டது. இப்போதோ அந்த நீர்வளம் நொதிக்கும் கழிவுகளால் நஞ்சூட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு தவறைச் சரிசெய்ய, இன்னொரு தவறைச் செய்தால் அது சரியான தீர்வு என்று ஆகிவிடுமா? எதிர்காலத் தேசத்தை எப்படி கட்டமைக்கப்போகின்றோம் என்கிற புரட்சிகர தரிசனங்கள் இல்லாமல், சூழல்நேயம், உயிர்நேயம், மனிதநேயம் இல்லாமல், தேர்தலில் ஒரு நாடாளுமன்ற ஆசனத்தைப் பெற்றுக்கொள்ளும் அற்பபுத்தியில் 1950இல் ஓர் அரசியல்வாதி செய்த தவறைச் சரிசெய்ய, இன்றைக்கு 60 ஆண்டுகளுக்குப் பின்னர் மனிதக் கழிவுகள், மாமிசக்கழிவுகள், மருத்துவமனைக் கழிவுகளைக் கொட்டிக் குழிகளை மூடலாம், இப்படியொரு தீர்வை முன்வைக்கும் அளவுக்குத்தான் இலங்கையின் அரசியல்வாதிகளினதும், அரசாங்க நிர்வாகசேவை அதிகாரிகளினதும் அறிவுசார் புலமை இருக்கிறது! கற்றுக்கொண்ட கல்வி அறிவிலும், தொழில்நுட்ப அறிவிலும் இவர்கள் எவ்வளவு தூரம் பின்நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றார்கள் என்பதையும், இயற்கையின் ஆற்றலுக்கு எதிராக மல்லுக்கட்டி போட்டிபோட்டு அறிவாலும், பணத்தாலும், அதிகாரத்தாலும், மனிதர்களால் எப்போதுமே ஜெயித்துவிட முடியாது என்பதையுமே இது காட்டுகின்றது.

## பொன்னாவெளியில் நடப்பது என்ன?

இயற்கை வளங்களைப் பொத்திப்பாதுகாத்து பராமரித்து வைத்திருக்கும் பாரம்பரிய கிராமங்களுக்குள் புகுந்து, பல்தேசிய நிறுவனங்கள் ஆசைவார்த்தைகளைப் பிரமாண்டமாக காட்டி, சாமான்ய மக்களின் புத்தியை மயக்கமுறச்செய்து, தீமை பயக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்த சம்மதத்தைப் பெற்றுவிடும். ஆனால், 'இந்தத் திட்டம் நல்லதல்ல. உங்களையும், உங்கள் கிராமத்தின் மண்வளத்தையும் நீர்வளத்தையும் அழித்துச் சுடுகாடு ஆக்கிவிடும். இந்த மண்ணின் பூர்வக்குடிகளான

10





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த.கலாமணியின் அரண்

## சிறுகதை நூல் விமர்சனம்




**அரியாலையான்**

கலாநிதி த.கலாமணியின் அரண் சிறுகதை நூல் வெளியீட்டின் அடுத்தடுத்த நாள்களில் அதிலுள்ள சிறுகதைகளை ஒரே தடவையில் வாசித்து முடித்திருந்தேன். வாசித்ததும் இந்த நூல்பற்றிய விமர்சனம் எழுதப் படவேண்டும் என்ற ஓர் உந்துதல் என்னுள் எழுந்தது.

சிறுகதை ஒன்று எல்லா வாசகர்களிடையேயும் ஒரே வித பிரதிபலிப்பை அல்லது அனுபவத்தை ஏற்படுத்தும் எனக் கூறமுடியாது. இதனை, வாசகர்களின் அறிவு, வாழ்க்கை அனுபவம், கள அனுபவம், வாசிக்கும் போதான புறச்சூழல், அகச்சூழல் என பல்வேறு காரணிகள் தீர்மானிக்கும். இக்கதைகளில் வரும் சில பாத்திரங்கள், சில களங்களை நேரடியாகத் தரிசித்த உணர்வு எனக்கு ஏற்படுவது ஏனோ தவிர்க்க முடியாததொன்றாகிவிட்டது. அவரின் கதை மாந்தரும், களமும் நான் தரிசித்த சில மனிதர்களும் களங்களும் ஒத்தனவாக உள்ளமை அதற்கான காரணமாக இருக்கலாம்.

அந்த வகையில் சில மாந்தர் மற்றும் களங்கள் பற்றிய பதிவுகளில் போதாமை உள்ளது போன்ற உணர்வு எனக்கு உள்ளது. சிறுகதை வடிவம் அதற்கு இடம் கொடுக்காமை ஒரு காரணமாக இருக்கலாம். (இந்தப் போதாமை மற்ற வாசகர்களுக்கு ஏற்பட வாய்ப்பில்லை.) அதனால் இச்சிறுகதை ஆசிரியர் அவர்களிடம் ஒரு வேண்டுகோள் விடுக்க உத்தேசித்திருந்தேன்.

அவரின் அறிவு, எழுத்தாற்றல், வாழ்நாள் கால அனுபவம் பல்வேறு நிபுணத்துவர்களுடனான ஊடாட்டம் மற்றும் ஆளுமைக்கமைய ஒரு நாவலை எழுத வேண்டுகோள்விடுக்க எண்ணியிருந்தேன். ஆனால் துரதிஷ்டவசமாக அந்த வேண்டுகோளை விடுக்க முன்னரே அவர் அமரராகி விட்டார்.

ஒரு சமூக நிலைமாறு காலத்தைக் கண்டவர். இரண்டு கல்விச் சீர்திருத்த காலத்தில் பணியாற்றிய கல்வியாளர். யுத்த தொடக்க காலத்திலும், சமாதான காலத்திலும், யுத்த முடிவிலும் வாழ்ந்தவர். கலை இலக்கியப் பங்காளர். ஆய்வாளர். நிர்வாக ஆற்றலாளர். இவ்வாறு பன்முகத் திறன் கொண்ட ஒருவரால் எமக்கு ஒரு நாவல் கிடைத்திருப்பின் அது நாம் செய்த பாக்கியமாக இருந்திருக்கும். காலத்தைக் காட்டும் கண்ணாடியாக அது அமைந்திருக்கும். தமிழுக்கு மேலும் ஓர் அணிகலன் கிடைத்திருக்கும்.

முதலாவது கதையான 'இன்னும் வரக் காணேனே.....' வரலாறு கற்ற, வரலாறு கற்பிக்கும் பட்டதாரி; ஆசிரியைக்கும், வரலாறு படைக்கத் துடிக்கும் ஒருவனுக்குமிடையிலான மென் உணர்வை, போராட்ட உறுதியை எடுத்தியம்பும், போராட்டகால கதையாக இது காணப்படுகின்றது.

இந்தப் பதிவுகளுடன் இனி 'அரணினுள்' உள்நுழைவோம்.

இதிலடங்கும் 10 சிறுகதைகளுள் 7 சிறுகதைகளின் தலைப்பு ஒற்றைச் சொல்லாலானது. இந்த ஒற்றைச்சொல் அல்லது இரண்டு சொற்கள் இணைந்ததான ஒற்றைச் சொல் தலைப்பு, நாம் சிறுகதையை வாசிக்கும்போது, இந்தச் சிறுகதை இப்படித்தான் நகரும், அல்லது நிறைவுறும் என்று ஊகிக்கமுடியாத நிலையை ஏற்படுத்துகின்றது. இது அவரின் ஓர் உத்தியாகவும் இருக்கலாம். அல்லாமலும். கதை வாசித்து முடிந்ததும் கதையின் தலைப்பை ஒருமுறை மீளவும் தேட வைக்கின்றது.

விடியலுக்குக் காத்திருக்கும் ஒருத்தியைப்பற்றிய கதையைப் பேசி நிற்கின்றது முதலாவது கதையான 'இன்னும் வரக் காணேனே.....' வரலாறு கற்ற, வரலாறு கற்பிக்கும் பட்டதாரி; ஆசிரியைக்கும், வரலாறு படைக்கத் துடிக்கும் ஒருவனுக்குமிடையிலான மென் உணர்வை, போராட்ட உறுதியை எடுத்தியம்பும், போராட்டகால கதையாக இது காணப்படுகின்றது. குலக்கொழுந்து சிறுகதை ஆசிரியத்துவம், சிறுவர் உரிமை, விடுதலைப் போராட்டம் என்பன பற்றி மிக அடக்கமாக எடுத்துரைக்கின்றது. இக்கதை பல்வேறு மன உணர்வுகளை கிளர்ந்தெழச் செய்கின்றது.

ஆன்மீகத்தில் இறைவனுக்கும், பக்தனுக்குமிடையேயான உறவை, புதிய கோணத்தில் சொல்லிநிற்கும் கதை 'தோழமை'. அதில்வரும் உரையாடல் வார்த்தைப் பிரயோகம் நிறைய நிறைய சிந்திக்க வைக்கின்றது.

'காரணன்' கதை மூடநம்பிக்கையையும் விஞ்ஞானத்தைப்பற்றியும் மிக எளிதாக எடுத்துரைக்கின்றது. இக்கதையில் முன்னைய கால கூட்டுக் குடும்பம் பற்றியும் எடுத்துரைக்கின்றது. அந்தக் கதையில் வரும் மால் என்கின்ற கதைக் களத்தை பற்றி விரிவாக ஒரு சிறுகதைக்குள் அடக்கிவிடமுடியாது. ஆனாலும் அந்த மாலும், அதைச் சுற்றியுள்ள கூட்டுக்குடும்ப வீடுகள் அல்லது குடிசைகள் பற்றியும், அங்கு வாழ்ந்த அனுபவமும் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் எல்லோருக்கும் இருக்காது. எனக்கு உண்டு. இந்த சிறுகதை ஆசிரியருக்கும் இருந்தது. ஆனாலும் அதுபற்றிய இலக்கியப் பதிவுகள் சுவைபட எடுத்துக் கூறப்பட்டதாகத் தெரியவில்லை.

மால் எனப்படும் மண்டபம் தரையும், திண்ணைகளும் மண்ணாலும், கூரை முற்றிய வைரமான முதிரை மரத் தூண்களாலும் தாங்கப்பட்டு நிற்கும். பனை ஓலையால் வேயப்பட்டு, குளுகுளுவென்றிருக்கும். 65 ஆண்டுகளுக்கு முன் நான் கண்டு அனுபவித்த கூட்டுக் குடும்ப அனுபவத்தைக் கண்முன்கொண்டு வருகின்றது, அந்த மால் என்கின்ற ஒற்றைச் சொல். சுற்றியுள்ள குடிசைகளில் ஒன்றில் அடுப்பெரியாவிட்டாலும், ஒருவரும் பசித்திருக்கார். பகலிலோ இரவிலோ பாதுகாப்பு அச்சம் இருக்காது. அமரர் கலாமணி ஒரு நாவல் எழுதும் முயற்சியில் ஈடுபட்டிருப்பின் இந்த அனுபவங்கள், இலக்கியத்தினூடாக எம்மைத் தொற்றியிருக்கும். அதனை அவரிடம் சொல்ல எண்ணியிருந்தேன்.

என் வழமையான சோம்பேறித்தனமும், எதனையும் தள்ளிப்போடும் போக்கும், இதனை அவரிடம் வெளிப்படுத்து முன்னரே காலன் அவரைக் கவர்ந்துசென்று விட்டான்.

'பேராண்மை' சிறுகதைபற்றியும் பேசத்தான் வேண்டும். இலக்கியங்களின் பயன்களிலொன்று ஒருவனை மானிடனாக வாழவைப்பதுமாகும். இதில் பல்வேறு வகைகளிலும் அவமானப்படும் ஒருவன் வேறொருவரின் மானத்தை மௌனத்தின் மூலம் காப்பதைச் சொல்லி நிற்கின்றது. தான் பழிப்பு நெழிப்புக்கு உள்ளாகினாலும், மற்றொருவரை பழிப்புகளிலிருந்து பாதுகாத்து வாழ்ந்து உயர்ந்து நிற்பதைக் கூறுகின்றது. 'அம்மாவின் பட்டுச்சேலை' 'சென்ரிமென்ற்றை' மடை மாற்றம் செய்து ஒருவரை திருப்திப்பட வைக்கும் கதை. அழகாகச் சொல்லப் பட்டிருக்கின்றது, அந்தப்பட்டுச் சேலை போல.

'அவா' சிறுகதை இந்தத் தொகுதியிலுள்ள ஒரு கதை. முதியோர் இல்லம் பற்றி, பந்த பாசம்பற்றி எழுதப்பட்டுள்ளது. வெளிநாட்டு மோகம் உள்ள இந்த நாளில் தாயைப் பார்க்க தாயகம் திரும்பும் ஒருவனின் கதை. வயதானவர்களின் ஏக்கங்களை எடுத்துரைக்கின்றது.

# தண்ணீருக்கான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உங்களை இங்கிருந்து நிரந்தரமாக குடிபெயரச்செய்து விடும். இப்படி உண்மையைக்கூறி மக்களுக்கு வழிகாட்டுபவரே நல்ல அரசியல் தலைவராக இருக்கமுடியும். ஆனால், பொன்னாவெளி கிராம மக்களின் விடயத்திலோ இந்த நிலைமை தலைகீழாக இருக்கிறது. கிராம மக்கள் சிமெந்து தொழிற்சாலைத் திட்டம் வேண்டாம் என்கிறார்கள். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, திட்டத்தை நடத்தி முடித்தே தீருவேன் என்று கூறுகிறார். அப்படியென்றால், பெருந்தொகை தரகுப்பணம் கைமாறி விட்டதா? என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

தாயின் முலையில் பால் குடிக்கச் சொன்னால், தாயின் இரத்தத்தையே உறிஞ்சிவிடும் அரசியல்வாதிகள் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கிறார்கள். இயற்கையை ஆரத்தழுவி அணைக்கச் சொன்னால், அணைப்பதுபோல நடித்து இயற்கையை சுரண்டிக் கொழுக்கும் அரசியல்வாதிகளும் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கிறார்கள். தரகுப் பணத்துக்காகவும், சுயநலத்துக்காகவும் இயற்கையை அசுரத்தனமாக வன்புணர்ந்துவிட்டு, பணத்தாலும் அதிகாரத்தாலும் அதனைச் சீர்செய்துவிட முடியுமென்று தப்புக்கணக்குப்போடும் அரசியல்வாதிகளும் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கிறார்கள். இப்படி அபத்தமானவர்களை தமிழ் மக்கள் தமது அரசியல் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கவே கூடாது. அப்படித் தேர்ந்தெடுப்பார்களாயின், தமது கை விரலைக்கொண்டு தமது கண்களைத்தாமே குத்திக் குருடாக்கிக்கொள்ளும் செயலுக்கு அது ஒப்பானதாகும்! இவ்விடத்தில் தமிழ் கருத்துருவாக்கிகளையும், யாழ்.பல்கலைக்கழகத்தின் துறைசார் அறிஞர்களையும் குற்றம்கடிகிறேன். நீங்கள் பிறந்து வளர்ந்த மண்ணுக்கு, நீங்கள் வாழும் தமிழ்ச் சமூகத்துக்கு, அடையாள அழிப்பு சார்ந்த பிரச்சினைகள் வரும்போதெல்லாம் நீங்கள் உங்களுடைய துறைசார் நிபுணத்துவ அறிவை, எது சரி? எது பிழை?, எது நன்மை? எது தீமை? என்று தெளிவுபடுத்தி, தமிழ் மக்களுக்கு சுயாதீனமாக வழங்கி வழிகாட்டுதல் வேண்டும். அப்படிச் செய்தால், இங்கு பல பிரச்சினைகள் பெரும் சர்ச்சையாக மேற்கிளம்பி பூதாகரமாவதற்கு முன்னரே நீர்த்துப்போகச் செய்யப்பட்டுவிடும். அப்படிச் செய்யாமல் கள்ள மௌனம் காத்தல் என்பது, நீங்கள் கற்ற கல்வி வெறுமனே அரசாங்க வேலைக்கும், அரசாங்க சம்பளப் பணத்துக்கும், அரசாங்க பதவி உயர்வுக்கும், பின்னாளில் அரசாங்க ஓய்வூதியத்துக்கும் மட்டும்தானா? என்ற அருவருப்பான கேள்விகளை உங்கள் முன் வைக்கவேண்டியிருக்கின்றது.

### சுண்ணக் கற்கள்தான் குடாநாட்டின் இருப்பு

முழு யாழ். குடாநாட்டையும், யாழ். குடாநாட்டை கிளிநொச்சி போன்ற இன்னைக்கும் கிளிநொச்சியின் பெருமளவு மேற்கு கரைப் பகுதிகளையும், சுண்ணக்கல் பீடபூமிகளே தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கின்றன. சுண்ணக்கற்களை அகழ்ந் தெடுத்தால் கடல்நீர் உட்புகுந்து நன்னீர்வளம் கெட்டுப்போகும். காலப்போக்கில் கரையோரக் கிராமங்கள் கடலுக்குள் மூழ்கிப்போய்விடும். இதனை எளிய உதாரணத்தில் சொல்வதென்றால் இப்படிச் சொல்லலாம், சுண்ணக்கற்களை அகழ்வதென்பது ஒரு வீட்டின் அத்திபாரத்தை உடைத்தெடுப்பதற்குச் சமம். அத்தி பாரத்தைப் பிடுங்கி எடுத்தபின்னர் ஒரு வீடு தாக்குப்பிடிக்குமா? ஆகவே தமிழர் தாயக மண்ணில் எங்கேனும் சுண்ணக்கற்களை அகழ்ந்தெடுக்க அனுமதிக்கமுடியாது. இதற்கு மோசமான சமகால முன்னுதாரணமாக காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை அமைக்கப்பட்ட சூழல், நம் கண்முன்னே உறுத்திக்கொண்டும், அச்சுறுத்திக்கொண்டும் நிற்கின்றது. அத்தியாவசியத்தேவை என்றால் மட்டும், ஒரு விடயத்தை நாம் இங்கு பரிசீலிக்கலாம். எப்படியென்றால், சிமெந்து தயாரிக்கத் தேவையான மூலப்பொருள்களை கப்பல்களில் கொண்டுவந்து அரைத்துப் பொதிசெய்யும் அல்லது சிமெந்தையே பெரிய கொள்கலன்களில் கொண்டுவந்து பிரித்துப் பொதியிடும் சூழலுக்குப் பாதிப்பில்லாத தொழிற்சாலைகளை இங்கு அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம். ஆனால், குறித்த தொழிற்சாலையினுள்ளே மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது சென்று, அதிகாரமளிக்கப்பட்ட சிவில் சமூக குழுவொன்று சூழல் நிலைமைகளை கண்காணித்து அறிக்கையிடுவதற்கு தொழிற்சாலை நிர்வாகம் இணக்கம் தெரிவிக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் மாவட்டத்தின் முத்தரிப்புத்துறை கிராமத்தில் வசித்து வருகின்ற, றெனால்ட் சகாய றினோசன் லெம்பேட் விளையாட்டுத் துறையில் மிகச் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்துவதுடன், தேசிய சாதனையாளராகவும் வலம் வருகின்றார். அவருடனான நேர்காணலே இது.



# பயிற்சி, முயற்சி இரண்டுமே விளையாட்டு வீரனுக்கு அழகு!



ச.பிரியதர்ஷன் குரூஸ்
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கேள்வி: **நீங்கள் விளையாட்டில் அதீத ஆர்வம் மிக்கவராக உள்ளீர்கள். இந்த ஆர்வம் உங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது? சிறுவயதில் இருந்து நீங்கள் எவ்வாறான விளையாட்டுக்களை செய்து வந்தீர்கள்?**

**பதில்:** விளையாட்டின் மீதான ஆர்வம் எனக்கு பத்து வயதில் ஏற்பட்டது. நான் மன்னார் அரிப்பு றோ.க.த.க. தேசியப் பாடசாலையில் கல்வி கற்றபோது எனக்கு மூத்தவர்கள் மைதானத்தில் ஓடுவதை மிகுந்த ஆர்வத்தோடு பார்ப்பேன். அத்துடன் பள்ளிச் சமூகம்தான் என்னை விளையாட்டுத்துறையில் மெருகேற்ற அடித்தளம் அமைத்து உதவியது. எனது பதினொரு வயதின் போது முதன்முதலாக நீளம் பாய்தல் நிகழ்வில் பங்குபற்றி மன்னார் வலயத்தில் முதலாம் இடத்தையும், வடமாகாணத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றேன். அதனோடு இணைந்து தடைதாண்டல், குறுந்தூர ஓட்டம், அஞ்சல் ஓட்டம் மற்றும் காற்பந்து போன்ற விளையாட்டுகளிலும் ஈடுபட்டேன். இதற்கான பயிற்சிகளை எனது உடற்கல்வி ஆசிரியர் கே.குமரன் வழங்கி என்னை வழிப்படுத்தினார்.

கேள்வி: **உங்கள் விளையாட்டுத்திறனை வளர்க்க நீங்கள் பல தடைகளைத் தாண்டியிருப்பீர்கள். அது தொடர்பில்...?**


**பதில்:** எனது பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் இல்லாவிட்டாலும் நான் காலையிலும் மாலையிலும் தனியே வந்து பயிற்சிகளைச் செய்வேன். ஏனெனில் விளையாட்டுத்துறையில் சாதிக்கவேண்டும் என்பது எனது பெருவிருப்பமாக இருந்தது. எனது பாடசாலைக் காலங்களில் அதிகமான நேரத்தை மைதானத்திலேயே செலவழித்துவந்தேன். சில சாதனைகளை நிலைநாட்டும் நோக்கம் என்னிடத்தில் இருந்தாலும், பயிற்சிகளை செய்வதற்கு என்னிடம் காலணிகள் கூட இல்லை. எனது குடும்ப வறுமையே இதற்குக் காரணம். ஆனால், அந்த வறுமைக்குள்ளும் எனது பெற்றோர் காலப்போக்கில் எனக்குரிய உதவிகளையும் ஆதரவையும் தந்தனர். அவர்களின் ஆதரவும் நான் விளையாட்டுத்திறனை மேம்படுத்த பெரிதும் உதவியது.

கேள்வி: **விளையாட்டுத்துறையில் மாகாண மட்டத்தில் நீங்கள் நிலைநாட்டிய சாதனைகளையும், கௌரவங்களையும் கூறமுடியுமா?**

**பதில்:** எனது 13ஆவது வயதில் மாகாண மட்டத்தில் நீளம் பாய்தல் நிகழ்வில் இரண்டாவது இடத்தையும், 100 மீற்றர் குறுந்தூர ஓட்டத்தில் மூன்றாவது இடத்தினையும் பெற்றேன். எனது 15ஆவது வயதில் நீளம் பாய்தல் நிகழ்வில் முதலாவது இடத்தினையும், 200 மீற்றர் ஓட்டத்தில் மாகாண மட்டத்தில் மூன்றாவது இடத்தினையும் பெற்றுக்கொண்டேன். அதன்பின் எனது 17ஆவது வயதில் யாழ்ப்பாண துரையப்பா விளையாட்டரங்கில் முதன்முதலாக கால்பதித்து நீளம் பாய்தல், முப்பாய்ச்சல், 200 மீற்றர் குறுந்தூர ஓட்டம் மற்றும் அஞ்சல் ஓட்டம் ஆகிய அனைத்து நிகழ்வுகளிலும் மாகாண மட்டத்தில் மூன்றாவது இடத்தினைப் பெற்றேன். எனது 19ஆவது வயதில் 200 மீற்றர் ஓட்டம், 110 மீற்றர் தடை தாண்டல், 400 மீற்றர் தடை தாண்டல் ஆகிய மூன்று நிகழ்வுகளிலும் மாகாண மட்டத்தில் முதலாவது இடத்தினை பெற்று மாகாணத்தில் புதிய சாதனையை நிலைநாட்டினேன்.
2016ஆம் ஆண்டு 200 மீற்றர் தடைதாண்டலில் மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தையும், 400 மீற்றர் தடைதாண்டல் மற்றும் 110 மீற்றர் தடைதாண்டல் நிகழ்வில் முதலாம் இடத்தினையும் பெற்று புதியதொரு சாதனையையும் மாகாணத்தில் நிலைநாட்டி தேசிய மட்டத்துக்குத் தெரிவாகினேன். அத்துடன், 2014, 2015, 2016ஆம் ஆண்டுகளில் வடமாகாண வர்ண விருதுகளைத் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொண்டேன்.

கேள்வி: **விளையாட்டுத்துறையில் நீங்கள் சாதித்த தேசிய ரீதியிலான சாதனைகள் மற்றும் பதிவுகள் எவை?**

**பதில்:** 2015ஆம் ஆண்டு எனது 19ஆவது வயதில் 400 மீற்றர் தடைதாண்டல் நிகழ்வில் 55.45 வினாடிகளில் ஓடி தேசிய மட்டத்தில் மூன்றாவது இடத்தினை பெற்றேன். இதற்கான தொழில்நுட்ப பயிற்சியினை தந்தவர் புனித சவேரியார் கல்லூரியின் முன்னாள் உடற்கல்வி ஆசிரியர் சுபாஸ்கரன் ஆவார்.
2015ஆம் ஆண்டு 27ஆவது இளையோர் விளையாட்டு விழாவில், 20 வயதுக்குட்பட்டோருக்கான 110 மீற்றர் தடைதாண்டல் நிகழ்வில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை பெற்றுக் கொண்டேன்.
2015ஆம் ஆண்டு கிரிடா சக்தி தேசிய விளையாட்டு விழாவில் தேசியமட்டத்தில் 100 மீற்றர் ஓட்டத்தில் இரண்டாம் இடத்தினையும், 200 மீற்றர் ஓட்டத்தில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டேன்.
2016ஆம் ஆண்டு கண்டி பொகம்பர விளையாட்டு மைதானத்தில் 110 மீற்றர் தடைதாண்டலில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தை பெற்று வெள்ளிப் பதக்கத்தை பெற்றுக் கொண்டேன்.



வடமாகாண வரலாற்றில் தேசிய விளையாட்டு விழாவில் குறுந்தூர ஓட்ட நிகழ்வில் 15.002 வினாடிகளில் 110 மீற்றர் தடைதாண்டலை நிகழ்த்தி தேசிய மட்டத்தில் தங்கப்பதக்கம் வென்ற ஒரு சாதனை மைந்தன் என்ற அடையாளம் இதுவரையில் எனக்கு மட்டுமே உண்டு என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.
2016, 2017 தேசிய மெய்வல்லுநர் விளையாட்டுவிழாவில் வடமாகாண அஞ்சல் அணி சார்பாக தெரிவு செய்யப்பட்டு இரண்டு தடவைகள் தேசியமட்டத்தில் பங்கு பற்றினேன். தேசியமட்டம்வரை நான் சாதனை படைப்பதற்கு ஆசிரியர் யூலியட் கிளிட்டஸ், ஆசிரியர் குமரன் ஆகியோர் பிரதான காரணமாயிருந்தார்கள்.
அதன்பின் எனது பாடசாலை வாழ்க்கையை முடித்துவிட்டு இலங்கை இராணுவப்படைக்கு தெரிவுசெய்யப்பட்டேன். அதன்பின் அதிலிருந்து இடைவிலகி இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி அங்கு எனது கல்வியைத் தொடர்வதற்காகச் சென்றேன்.

கேள்வி: **பல்கலைக்கழகம் சென்ற பின்னர் உங்களுடைய விளையாட்டுத்துறையில் ஏற்பட்ட மாற்றம் என்ன?**

**பதில்:** பாடசாலைக் காலங்களில் சில சாதனைகளை நிலைநாட்டி விட்டு இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்துக்குச் சென்ற நான் அங்கே எனது தடகள விளையாட்டுகளை இடைநிறுத்திவிட்டு இலங்கை சப்ரகமுக பல்கலைக்கழகத்தினுடைய உதைபந்தாட்ட அணியில் இணைந்து கொண்டேன். அங்கு 2022ஆம் ஆண்டுக்கான உதைபந்தாட்ட அணியின் தலைவராகவும் இருந்தேன். அத்தோடு அகில இலங்கை ரீதியில் பல்கலைக்கழகங்களுக்கிடையில் நடைபெறுகின்ற உதைபந்தாட்ட போட்டியில் தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் எமது பல்கலைக்கழகம் வெற்றி பெறுவதற்கு நான் பிரதான காரணமாக இருந்தேன். தற்போது மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி தேசிய பாடசாலையில் விளையாட்டு பயிற்றுவிப்பாளராக கடமையாற்றி வருகின்றேன்.

கேள்வி: **தற்போது ஒரு விளையாட்டு பயிற்றுவிப்பாளராக உங்கள் அனுபவம் எவ்வாறு உள்ளது?**

**பதில்:** பாடசாலைச் சிறுவர்களைத் தேர்ந்தெடுத்து எனக்குத் தெரிந்த விளையாட்டு உத்திகளை அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து அவர்களை சிறுவயதில் இருந்து விளையாட்டுத் துறையில் வளர்த்தெடுக்கவேண்டும் என்ற கனவோடு பயிற்சி கொடுத்துக்கொண்டிருக்கின்றேன். சிறார்கள் ஆர்வமாக வந்து பயிற்சிகளை பெற்றுக்கொண்டாலும் சமூகத்திடமிருந்து விளையாட்டுத்துறைக்கு கிடைக்கின்ற ஆதரவு என்பது எப்போதும் போதாமலே இருக்கிறது.

கேள்வி: **விளையாட்டுத்துறையின் தற்போதைய போக்கு தொடர்பில் கூறமுடியுமா?**

**பதில்:** விளையாட்டுத்துறை என்பது பெரும் கடல்போன்றது. கரையில் இருந்து பார்த்தால் அதன் ஆழமும் அனுகூலமும் தெரியாது. எனவே பெற்றோர் இந்தத்துறையை நோக்கியும் தங்களின் பிள்ளைகளை ஊக்கப்படுத்த வேண்டும். தற்காலத்தை பொறுத்தவரை விளையாட்டுத் துறையானது மிகவும் வீழ்ச்சி அடைந்துள்ளது. பாடசாலைக்காலம் முடிந்தவுடன் அனைவருமே விளையாட்டுத்துறையில் காட்டும் ஆர்வத்தை கைவிட்டு விடுகின்றனர். அத்தோடு இன்றைய பாடசாலை மாணவர்கள் முதல் இளைஞர்கள் வரை போதைக்கு அடிமையாகி அதிலேயே அதிகளவான நாட்டத்தை செலுத்துகின்றார்கள் என்பது மனதிற்கு மிகவும் வேதனையாக இருக்கிறது. வறுமை என்பது விளையாட்டுக்கு தடை அல்ல. நான் விளையாடிய காலங்களில் எனது குடும்பத்தின் வறுமை சவாலாக அமைந்த போதும் எனது பயிற்சியையும், முயற்சியையும் ஒருபோதும் நான் கைவிடவில்லை. பயிற்சியோடும் முயற்சியோடும் வீறுநடை போடுவதே நல்ல விளையாட்டு வீரனுக்கு அழகு என்றே கூறுவேன். ஆரோக்கியமான சமூகத்துக்கு விளையாட்டுத்துறை மிக அவசியமானது என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழாய் வீசிய தமிழ் மாருதம்





பா.குமுதன்

பண்பாடு, கலாசாரம், என்பது மக்களின் வாழ்வியல் முறையினையும், அவர்களது எண்ணங்களையும், செயல்களையும் உள்ளடக்கியது. ஒவ்வொரு மனிதக்குழுவும் தமக்கென சில தனித்துவமான மரபுகளையும், கட்டமைப்புகளையும் கொண்டிருக்கக் காண்கிறோம்.

அந்தக் கட்டமைப்பில் அவர்களால் கொண்டாடப்படும் விழாக்கள் முக்கியமான பங்காற்றுகின்றன. அவை ஒவ்வொரு குழுவினதும் கலாசார விழுமியங்களை, பறைசாற்றுவதை அவதானிக்கமுடியும்.

அது அந்த மக்களின் தொடர்ச்சியான இருப்புக்கும், வரலாற்றுத் தொடர்ச்சிக்கும் அடித்தளம் இடுகின்றன.

அந்தவகையில் மாறிவரும் சமூக ஒழுங்கில் மறந்துபோன எமது பாரம்பரியங்களையும், பண்பாட்டையும் பாதுகாத்து தற்கால்ச் சந்ததிக்குக் கடத்தும் நோக்குடன் உருவாக்கப்பட்ட தமிழ் மாமன்றத்தின் 'தமிழ்மாருதம்' விழா வவுனியாவில் அண்மையில் சிறப்புற இடம்பெற்றது.



இருநாள் நிகழ்வாக அது ஒழுங்கமைக்கப்பட்டது. முதல்நாள் மாலை விபுலாநந்தர் சிலையடியில் ஆரம்பமாகிய பண்பாட்டு ஊர்வலம் மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ள நிகழ்வு மண்டபம்வரை சென்றது. அங்கு அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன. மறுநாள் காலை ஆரம்பித்த நிகழ்வுகள் இரவு 8 மணிவரை கலையார்வம் கொண்டோருக்கு விருந்தளித்தன.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமாகிய நிகழ்வில், தலைமை உரையை மன்றத்தின் தலைவர் சி.கிருபாநந்தகுமாரன் நிகழ்த்தினார்.

தமிழ்மக்களின் வீரத்தையும் காதலையும் கருப்பொருளாகக் கொண்டு வியத்தகு வகையில் நிகழ்வு மண்டபம் வண்ணஒளி வீச்சுடன் விசேடமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. கரகாட்டம், நாட்டியநாடகம், அருவிச்சிந்து, இசைச்சங்கமம், விவாதஅரங்கு, பட்டிமண்டபம், சுழலும் சொற்போர், கவியரங்கு, இராவணேஸ்வரன் வடமோடிக்கூத்து போன்ற நிகழ்வுகள் ரசிகர்களின் கலைத்தாகத்தைத் தீர்த்திருக்கும் என்பதில் ஐயமில்லை.




நிகழ்வில் விசேடமாக கலை,பண்பாட்டுக்கும் அப்பால் தமிழர் அரசியலின் வெறுமைநிலை, பொருளாதாரம், சமூக அவலநிலை, நிலம் அற்றுப்போதலின் விளைவுகள் போன்ற யதார்த்தபூர்வமான, சமகால விடயங்கள் நிகழ்வுகளின் கருவில் உட்புகுத்தப்பட்டிருந்தன. தமிழ் மாமன்றத்துக்கே உரித்தான தனித்துவங்களில் இதுவும் ஒன்று எனக் கூறலாம்.

அத்துடன் 'சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே! எனும் அற்புதமான தலைப்பில் தமிழ் நாட்டில் இருந்து வருகைதந்த மூத்தவழக்கறிஞர் இலக்கியச்சுடர் த.இராமலிங்கம் சிறப்புரை ஆற்றியிருந்தார். தமிழ்மாமன்றம் இளைஞர்களால் இளைஞர்களுக்காக உருவாக்கப்பட்டது. அதன் நோக்கமும் விளைவும் நிகழ்வுகளில் பிரதிபலித்தது. தடம்மாறி, தடுமாறிச்செல்லும் தமிழ்ச் சமூகத்துக்கு இப்படியான பண்பாட்டு நிகழ்வுகள் அருங்கொடையே. தமிழ்மாருதம் வீசியதில் வீழ்ந்தவர்கள் பலர்!

## கண்ணீருக்குத் தீர்ப்பாகி வா....!

கட்டடங்களோ நாளும் வளர்க்கின்றன
கல்மனமோ இன்னும் கனியவில்லை
கல்லும் மணலும் சிமெந்தும் கடந்து
கருங்கல்லில் நாருரிக்கின்றோம்
தொட்டிலையும் தங்கத்தால் செய்து
தோலயும் மாற்றவே துடிக்கின்றோம்
தோசை, இட்லி, பலகாரம் எல்லாமே
தெருவீதிக்கே பிரம்மாதமாகிவிட்டன
வட்டிக்கு வாழவும் வடிவாக உடுக்கவும்
வழக்கை வெல்லுகின்றோம்
வரம் வாங்கலாம் என்று வைரத்தையும்
வைத்து விலாசமாகின்றோம்
குட்டியிந்தத் தீவிலே கோயில்களோ பல்லாயிரம்
குடிசைகளில் மக்களோ வறுமையில்
குரோதியே நீ கோபுரங்களில் குந்திவிடாதே
கண்ணீருக்குத் தீர்ப்பாகி வா!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்பியோடிய கைதிகள் 30 நிமிடங்களில் கைது

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்துக்கு வழக்கு ஒன்றுக்காகக் கொண்டுசெல்லப் பட்ட இரண்டு கைதிகள் நேற்றுச் செவ் வாய்க்கிழமை அங்கிருந்து தப்பியோடிய நிலையில், அவர்கள் 30 நிமிடங்களுக் குள் பொலிஸாரால் மீண்டும் கைதுசெய் யப்பட்டனர்.

திருட்டுச் சம்பவமொன்றில் ஒரு வருட சிறைத் தண்டனை பெற்ற கைதியும், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மற்றொரு கைதியும் சாவகச்சேரி நீதி வான் நீதிமன்றத்தில் அவர்களுக்கிருந்த பிறிதொரு வழக்குக்காகக் கொண்டு செல்லப்பட்டபோதே தப்பியோடி னார்கள்.


விரைந்து செயற்பட்ட சாவகச்சேரிப் பொலிஸார் 30 நிமிடங்களுக்குள் கைதி களை மீண்டும் கைதுசெய்து சாவகச் சேரி நீதிவான் நீதிமன்றத்தில் முன்னி லைப்படுத்தினர்.

தப்பியோடிய குற்றத்திற்காக குறித்த இரு கைதிகளுக்கும் தலா ஆறு மாத சாதா ரண சிறைத் தண்டனையும் தலா ஆயி ரத்து 500 ரூபா தண்டப்பணமும் விதித்து நீதிவான் ஏ.யூட்சன் உத்தரவிட் டார். தண்டப்பணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலதிகமாக மேலும் ஒரு மாத காலம் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிவான் மேலும் உத்தரவிட்டார். (ம-66)

## மணமகள் தேவை

76 (V) விவாகரத்து பெற்ற பட்டதாரி
**கனடா சிற்றிசன் மணமகனிற்கு**
84.85.86 ல் பிறந்த
**நற்குணமுள்ள மணமகள் தேவை.**
**துர்க்கா திருமண சேவை:**
**077 818 5978**
(CS/54745) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 13 • 12 • 1937

மறைவு 13 • 04 • 2024

### ஞானப்பிரகாசம் சேவியர் ஏபிரகாம் (ராசு)

யாழ். பாங்ஷால் வீதியைப் பிறப்பிடமாகவும் அடப்பன் வீதி. 3 ம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் சேவியர் ஏபிரகாம் (ராசு) கடந்த 13.04.2024 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான லோறன்ஸ்தம்பி ஏபிரகாம் - அக்னெஸ் ஆகி யோரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை யேற்றாட் ஆகியோரின் அன்பு மருமகனும். காலஞ்சென்ற கிளாறம்மா (நவமணி)யின் பாசமிகு கணவரும். காலஞ்சென்றவர்களான இம்மனுவேல் ஏபிரகாம். றீற்றர் ஏபிரகாம். கெனியூட் ஏபிரகாம். அன்ரன் ஏபிரகாம். கெனடி ஏபிரகாம் மற்றும் இமாக்குலேற்றா (மலர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும். ஜெனற் பெற்ற நிலா (அனிற்றா). ஜெசியா றெறன்சியா (சூட்டி) பெனற் எட்வின் (சசி). மேவின் வெஸ்லி (ரவி) ஆகியோரின் அன்பு தந்தையும். றெஜினோல்ட் (மனோ). அருள்தாசன் (ராஜன்). அன்ரனற் (பவிதா). கிறிஸ்ரா தாரணி. றுதிப் பிறின்டா ஆகியோரின் பாசமிகு மாமனாரும். நோயல். காமலீன். சந்துரு. தருண். ஸ்ரெபியா. ஷெரோலின். ரவிசா. தாரவி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.04.2024) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அடப்பன் வீதியில் உள்ள அவரது இல்லத்திலிருந்து மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அடப்பன் வீதி,**
**3 ஆம் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**சூட்டி (மகள் - 074 007 1714)**

(CS/54744) (N-1)

## மரண அறிவித்தல்



தோற்றம் 01 • 02 • 1963

மறைவு 15 • 04 • 2024

### திருமதி கெங்காதரன் சுலோசனா

**(ஓய்வுபெற்ற உப அதிபர் யா/ சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்)**

வட்டுக்கோட்டை சங்கரத்தை வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுலோசனா கெங்காதரன் கடந்த (15.04.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - இராசமணி தம்பதியரின் புதல்வியும். காலஞ்சென்றவர்களான பரமலிங்கம் - சிவநேசம் தம்பதியரின் மருமகளும், கெங்காதரன் (ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் - வீதி அபிவிருத்தி திணைக்களம் - யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், சாய்ராவின் (மாணவி - யா/ வட்டு மத்திய கல்லூரி) அன்புத் தாயாரும். பாலரஞ்சனின் (லக்ஸ்மி ஸ்டோர்ஸ். வட்டுக்கோட்டை) அன்புச் சகோதரியும். தங்கராணி (கனடா). காலஞ்சென்ற ஜெயந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2024) புதன்கிழமை காலை 8.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**வட்டு தென்மேற்கு,**
**வட்டுக்கோட்டை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 844 5558**

(CR 42229) A-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 22 • 03 • 1951

மறைவு 13 • 04 • 2024

### தம்பையா மகாலிங்கம்

காரைநகர் முல்லைப்பிளவை பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிட மாகவும் கொண்ட தம்பையா மகாலிங்கம் கடந்த (13.04.2024) சனிக் கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - மனோன்மணி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான காரைநகர் மாப்பாணவூரியைச் சேர்ந்த சண்முகம் - தாட்சாயினி தம்பதியரின் மூத்த மருமகனும், நிர்மலா அவர்களின் அன்புக் கணவரும், சுந்தராம்பாள், தியாகேஸ்வரி காலஞ் சென்ற அமிர்தலிங்கம் மற்றும் யோகேஸ்வரி, உருத்திரலிங்கம், சிவனேஸ் வரி, கணேசலிங்கம் ஆகியோரின் மூத்த சகோதரனும், காலஞ்சென்ற தியாகராசா மற்றும் தங்கராசா, விக்கினேஸ்வரி, சுந்தரலிங்கம், மோகனாம் பாள், காலஞ்சென்ற சதாசிவம், காலஞ்சென்ற சுந்தரேசன் மற்றும் வசந்தராணி, காந்திமதி, உமாதேவி, செல்வராணி, அமுதராணி, இராசகோ பாலன், மகாலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.04.2024) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சண்முகம் வசந்தராணி**
**021 222 1725**
**[illegible]னர் வீதி**
**[illegible] யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS/54743) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கு - கிழக்கு பெண்கள் கூட்டுறவுச்சங்க ஒழுங்குபடுத்தலில், கிளிநொச்சி பசுமைப் பூங்காவில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் மகளிர்தின நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (எ-113)



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, சுன்னாகம் சிவன் சிறுவர் கழகம் முன்னெடுத்த, சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், சுன்னாகம் சிவன் முன்பள்ளி முன்றலில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்றன. கழக ஸ்தாபகர் திருமதி கவிதாமலர் சுதேஸ்வரன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. (ப-66)



ஏழாலை அத்தியடி முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து, பத்துத் தினங்கள் இந்த ஆலய மஹோற்சவம் இடம்பெறவுள்ளது. (ப-66)



மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயதின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு வித்தியாலய முதல்வர் சுதாமதி தயாபரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. (எ-159)




# கேள்வி அறிவித்தல்

## சபை நிதி மற்றும் மேலதிக முத்திரை தீர்வை வேலைத்திட்டம் - 2024

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை

1. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் சபை நிதி மற்றும் மேலதிக முத்திரை தீர்வை நிதிகளின் ஒரு பகுதி குறித்த வேலைத்திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. **பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் விலைக்கேள்வியாளர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி மற்றும் கட்டுமான அமைப்புக்கான சிடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 04 (Section IV) இலும் மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037, தொலைநகல் 021-205-0036, E-Mail: pallaips@gmail.com)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் 15.00 மணி வரை 17.04.2024 ஆம் திகதியிலிருந்து 30.04.2024 ஆம் வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை எனும் இடத்திலிருந்து 17.04.2024ஆம் திகதியிலிருந்து 30.04.2024 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மட்டும் காலை 09.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3,500/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை எனும் முகவரிக்கு 02.05.2024 திகதி மாலை 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | நிதி மூலம் | மதிப்பீட்டுத் தொகை VAT நீங்கலாக (Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/ASD/W/01/2024 | Reconstruction of Thampakamam Vannankerny Uoorellai Road | ASD | 1.19 Mn | 45 நாட்கள் | C9 or C8 | 18,000.00 | 18.07.2024 |
| NP/14/45(3)/PL/CF/W/02/2024 | Reconstruction of Muhamalai Sub Office Road | Council | 3.72 Mn | 60 நாட்கள் | C8 or C7 | 55,000.00 | 01.08.2024 |

10. கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 24.04.2024 திகதி காலை 10.30 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.
11. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

தலைவர்,
பெறுகைக்குழு,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.
17.04.2024

(ст.42223) (N-1)


# அநுர ஆட்சிக்கு வருவது 'கோத்தா பகுதி இரண்டு'

## சாடுகிறது ஐ.ம.ச.

கொழும்பு, ஏப். 17

தேசிய மக்கள் சக்தியை ஆட்சிக்குக் கொண்டுவருவதென்பது கோத்தாபய - பகுதி 2 ஆகவே அமையும். அந்தத் தவறை நாட்டு மக்கள் செய்யமாட்டார்கள் என நம்புகிறேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜே.வி.பி.யால் இழைக்கப்பட்டுள்ள கொடூரங்கள் மக்களுக்குத் தெரியும். அவர்களால் கிராமங்களுக்குச் செல்ல முடியாது. அதனால்தான் தேசிய மக்கள் சக்தி என்ற பெயரோடு வந்துள்ளனர். தேசிய மக்கள் சக்தியில் உள்ளவர்கள் ஜே.வி.பி.யின் தலை வர்கள் தான். மாறாக அது புதிய அரசியல் இயக்கம் அல்ல.

பொருளாதாரத்துக்குப் பேரழிவை அக்கட்சியினரே ஏற்படுத்தினர். தேசிய மக்கள் சக்தி என வெளியில் காண்பிக்கப்பட்டாலும் ஜே.வி.பி.தான் அங்கு முடிவெடுக்கும் சக்தி. அக்கட்சிக்கு சர்வதேச ஆதரவு இல்லை. ஆட்சி செய்ய அனுபவமும் இல்லை. பொருளாதாரத் திட்டமும் இல்லை. தேசிய மக்கள் சக்தியை ஆதரிப்பது 'கோத்தா பகுதி 2' ஆகவே அமையும். அந்தத் தவறை நாட்டு மக்கள் செய்யமாட்டார்கள் என நம்புகின்றோம்- என்றார். (ஒ-44)

# தொடர் பேச்சுகளில் பெரமுன - ஐ.தே.க.!

கொழும்பு, ஏப். 17

பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு பரந்த கூட்டணி அமைக்கத் தீர்மானித்துள்ளன என்று உள்ளக வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

முதற்கட்டமாக இரு பிரதான கட்சிகளுக்கும் இடையில் கொள்கையளவிலான உடன்பாடுகளை எட்டுவதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

இரு கட்சிகளுக்குமிடையே தேசிய கொள்கை இணக்கப்பாடு எட்டப் படாமையால், விரைவில் உடன்படிக்கை கைச்சாத்திடுதல் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பேச்சுகளில் இணக்கப்பாடு எட்டப்பட்டால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராகப் பொதுச் சின்னத்தில் போட்டியிடுவோம்.

இணக்கப்பாடு எட்டப்படாவிட்டால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் நியமிக்கப்படுவார் எனக் கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார அமைச்சு மோசடிக் கூடாரம்!

## 679 வாகனங்கள் மாயம் சஜித் நேற்று விளாசல்

கொழும்பு, ஏப். 17

சுகாதார அமைச்சில் மருந்துமோசடிகள்மட்டும் இடம்பெறவில்லை. அமைச்சுக்குச் சொந்தமான 679 வாகனங்களும் காணாமற்போயுள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்றுத் தெரிவித்துள்ளார்.



சஜித் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

சுகாதாரத்துறையில் இடம்பெற்ற மருந்துப்பொருள் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் இலஞ்ச மோசடிகள் தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் ஐக்கிய மக்கள் சக்தி பெரும் போராட்டத்தை நடத்தியே திருடர்களை நீதிமன்றத்தில் நிறுத்தியது. மருந்துப்பொருள் மோசடி குறித்தே பலர் பேசிக்கொண்டிருக்கின்றோம். ஆனால், சுகாதார அமைச்சுக்குச் சொந்தமான 679 வாகனங்கள் காணாமல் போயுள்ளன.

இதில் 240 வாகனங்கள் குறித்த சில தகவல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால், சுகாதார அமைச்சு மேலதிக தகவல்களை கணக்காய்வு அலுவலகத்துக்கு ஒப்படைக்கவில்லை. மேலும் 439 வாகனங்கள் குறித்து எந்தத் தகவலும் இல்லை. நாடு வங்குரோத்தாகும் நிலையில் இருக்கும்போது இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் இந்த மோசடிகள் ஒவ்வொன்று தொடர்பாகவும் தனித்தனியான விசாரணைகள் நடத்தப்படும்.

தேர்தல் வருடத்தில் அரச தரப்பினர் தமது நட்பு வட்டார நண்பர்களுடன் இணைந்து, அரசாங்க-தனியார் ஒப்பந்தங்களை அமுல்படுத்தி, பெரியளவிலான காணிக் கொள்ளைகளில் ஈடுபட்டு வருகின்றனர். கிழக்கு மாகாணத்தில் இந்தக் காணிக் கொள்ளை நடந்து வருகிறது. நாட்டுக்கு எத்தகைய தொரு தலைவர் தேவை என்பதை மக்களே தீர்மானிக்கவேண்டும்- என்றார். (ம)

# பண்டிதர் கடம்பேஸ்வரன் நேற்றுக் காலமானார்!

யாழ்ப்பாணம், ஏப். 17



பண்டிதர் ம.ந.கடம்பேஸ்வரன் (வயது - 78) நேற்றுக் காலமானார். தமிழ்ப் பண்டிதரும், வட்டுக்கோட்டை தமிழ்ச் சங்கத்தின் தலைவரும், இலக்கிய உலகில் தீவிர பற்றுக் கொண்ட செயற்பாட்டாளருமான பண்டிதர் கடம்பேஸ்வரன் அண்மைக்காலமாக சுகவீனமுற்றிருந்த நிலையில், நேற்றுக் காலமானார். ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தில் தவிர்க்கப்பட முடியாத பண்டிதராகவும் அவர் அறியப் படுகின்றார். இவர் ஈழத்துத் தமிழ் இலக்கியத்துக்கும், தமிழ் மொழிக்கும் ஆற்றிய தொண்டுக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் கௌரவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## விஷப்பூச்சி...

சண்முகவேல் அருட்செல்வன் (வயது-52) என்ற நபரே உயிரிழந்தவராவார். கடந்த 14ஆம் திகதி அந்த நபருக்கு விஷப்பூச்சி கடித்துள்ளதாகத் தெரிய வருகின்றது. காதின் கீழ்ப் பக்கத்தில் ஏற்பட்ட வீக்கத்தையடுத்து, அவர் பார்வை பார்த்துள்ளார். எனினும் நோய் நிலைமை தீவிரமடைந்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அடுத்தடுத்த தினங்களில் சேர்க்கப்பட்டுள்ளார். சிகிச்சையின்போது நேற்று முன்தினம் அவர் உயிரிழந்தார்.

விஷப்பூச்சி ஏதும் கடித்ததால் அவர் உயிரிழந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## இலங்கை...

ஈரானால் இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள 'உமாஓயா' திட்டத்தைத் திறந்து வைப்பதற்காகவே ரைசி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்கின்றார். 'உமாஓயா' பல்நோக்குத் திட்டம் ஈரானிய நிறுவனங்களின் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் திட்டமாகக் கட்டப்பட்டது. இதன் மூலம், 60 மெகாவாட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு, ஐந்தாயிரம் ஏக்கர் விவசாய நிலங்களுக்கு தண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட உள்ளது.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள பிராந்திய மோதல்களையடுத்து, அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடன் நேருக்குநேர் மோதி வரும் ஈரானின் ஜனாதிபதி இலங்கைக்கு வருகைதரவுள்ளமை பரபரப்பான விடயமாகக் கருதப்படுகின்றது. ஈரான் ஜனாதிபதியின் இலங்கைப் பயணத்தை அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் உற்று நோக்கியுள்ளன. இலங்கை அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் சக்தியாக வுள்ள அமெரிக்காவுக்கு ஈரான் ஜனாதிபதியின் பயணம் குறித்துத் திருப்தியில்லை யென இராஜதந்திர வட்டாரங்களில் அறியமுடிகின்றது.

அத்துடன், சர்வதேச அரசியலில் இருந்தும் வர்த்தகத்தில் இருந்தும் ஈரானைத் தனிமைப்படுத்தவேண்டும் என்று இஸ்ரேல் கோரியுள்ள பின்னணியில், ஈரான் ஜனாதிபதியின் இலங்கைக்கான வருகையால், இலங்கையர்களுக்கு வழங்கும் தொழில் வாய்ப்புகளை இஸ்ரேல் தவிர்க்கும் என்றும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம)

## இந்தியத் ...

களாகச் சென்ற பெற்றோருக்குப் பிறந்திருந்தார். கடந்த 2021ஆம் ஆண்டு இவருக்கு இந்தியக் கடவுச்சீட்டு வழங்க மறுத்தபோது அதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தை அவர் நாடினார்.

மண்டபம் பகுதியில் அவர் பிறந்ததற்கான பிறப்புச் சான்றிதழை அவர் வைத்திருப்பதால், நளினிக்கு இந்தியக்கடவுச்சீட்டு வழங்குமாறு சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளை நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் கடந்த 2022ஆம் ஆண்டு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக அவருக்கு கடவுச்சீட்டு கிடைத்த பிறகும், மாவட்ட ஆட்சியரின் சிறப்பு அனுமதியின்பேரில், கொட்டப்பட்டு ஏதிலிகள் முகாமிலேயே தனது குடும்பத்துடன் தங்கியிருந்தார். இந்தியத் தேர்தல் ஆணையத்தால் வழங்கப்படும் வாக்காளர் அடையாள அட்டை இந்த வாரத் தொடக்கத்தில் நளினிக்கு கிடைத்துள்ளது. இதனால், எதிர்வரும் 19ஆம் திகதி தமிழகத்தில் இடம்பெறவுள்ள இந்திய மக்களவைத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையை நளினி கிருபாகரன் பெற்றுள்ளார். (அ-ம-100)

## வெடுக்குநாறிமலை...

விசாரணைக்காக நேற்று அழைக்கப்பட்டிருந்தனர். விசாரணையில் தொல்பொருள் சின்னங்களுக்கு ஆலய வழிபாட்டின்போது சேதங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன என்ற குற்றச்சாட்டை தொல்பொருள் திணைக்களத்தினர் முன்வைத்த போது, அவற்றை ஆலய நிர்வாகத்தினர் திட்டவட்டமாக நிராகரித்துள்ளனர்.

இதேவேளை- குறித்த விசாரணை தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளதுடன், வரும் நாள்களில் நெடுங்கேணிப் பொலிஸார் மற்றும் வனவளத் திணைக்களத்தினரும் அழைக்கப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ம-18-110)

## ஈரானின்...

ஈரானின் இரண்டாம் நிலை போர்த் தந்திரி மற்றும் தளபதிகள் உள்ளிட்ட 13 பேர் கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலடியாக ஈரான் கடந்த இரண்டுதினங்களுக்கு முன்னர் தாக்குதல் நடத்தியது. ஈரானின் தாக்குதலில் இஸ்ரேலின் தென்பகுதியில் உள்ள இராணுவத் தளம் பகுதியளவில் சேதமடைந்தது. இவ்வாறான தொரு பின்னணியிலேயே, ஈரான் மீது இஸ்ரேல் நேரடித் தாக்குதலை நடத்த வாய்ப்பிருப்பதாகவும் ஈரானிய அணுவுலைகள் இஸ்ரேலால் இலக்கு வைக்கப் படலாம் என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அணுசக்திகண்காணிப்பு அமைப்பு எச்சரித்துள்ளது.

ஈரானின் அணுவுலைகள் இஸ்ரேலால் தாக்கப்படலாம் என்பது தொடர்பில் நாங்கள் அச்சமடைந்துள்ளோம் என்று ஐக்கிய நாடுகள் அணுசக்திக் கண்காணிப்பு அமைப்பு தனது எச்சரிக்கைக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

ஈரான் மீது தாக்குதல் நடத்தினால் இஸ்ரேல் வரலாறு காணாத அழிவைச் சந்திக்கும். அத்துடன் இஸ்ரேலுக்கு உதவும் எந்தவொரு நாடும் ஈரானால் தாக்கப்படும். அது ஜோர்தானாக இருந்தாலும் கூட என்று ஈரான் முன்னதாக எச்சரித்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## யுவதிக்கும்...

காரணமாக அமைந்துள்ளது. நேற்று அதிகாலை 4 மணியளவில் யுவதியின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த அந்த நபர் மேற்படி இருவர் மீதும் கத்திவெட்டுத் தாக்குதலை நடத்திய பின்னர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார் என்று பொலிஸார் முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-125-66-26)

## பாலித...

மின்சாரம் தாக்கியதில் அவர் நாகொட மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். எனினும், சிகிச்சையின்போது அவர் உயிரிழந்தார் என்று மருத்துவமனைப் பேச்சாளர் தெரிவித்தார்.

வெள்ளப் பேரிடர் மீட்புப் பணிகளின் போது, மக்களுடன் மக்களாகக் களத்தில் நின்று பணியாற்றிய தௌவப்பெரும ஒரு 'செயல் வீரனாக' மக்கள் மத்தியில் அறியப்பட்டார். இளைஞர்கள் மத்தியில் வரவேற்புப் பெற்ற அரசியல்வாதியாகவும் திகழ்ந்தார். அவருடைய மறைவுக்குப் பல தரப்பினரும் தமது அஞ்சலியைச் செலுத்தி வருகின்றனர். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். செல்கின்றார் ஈரான் ஜனாதிபதி

இஸ்லாமபாத், ஏப்.17

மத்திய கிழக்கில் நிலவும் போ [illegible]ளுக்கு மத்தியில் ஈரான் ஜனாதிபதி இபராஹிம் ரைசி அடுத்த வாரம் பாகிஸ்தானுக்குச் செல்லவுள்ளார்.

எதிர்வரும் 22ஆம் திகதி பாகிஸ்தான் செல்லும் இப்ராஹிம் ரைசி, பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி, பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் மற்றும் அந்நாட்டு இராணுவத் தலைவர்களைச் சந்திப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, ஈரான் சுமார் 300 ஏவுகணைகள் மற்றும் ட்ரோன் தாக்குதல்களை இஸ்ரேல் மீது மேற்கொண்டது. அதனால் அந்தப் பிராந்தியத்தில் போர்ப் பதற்றம் தொற்றியுள்ளது. (எ-இ)

# சிட்னி தேவாலயத் தாக்குதல் பயங்கரவாதத் தாக்குதலே!

## அந்தநாட்டுப் பொலிஸார் தெரிவிப்பு

சிட்னி, ஏப்.17

சிட்னியில் கிறிஸ்தவ தேவாலயத்தில் இடம்பெற்ற கத்திக்குத்துத் தாக்குதல் மதரீதியான நோக்கம் கொண்ட பயங்கரவாதத் தாக்குதல் என அவுஸ்திரேலியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அஸ்ஸிரியன் கிறிஸ்ட் தகுட் செப்பர்ட் தேவாலயத்தில் மதகுரு மீது கத்திக்குத்துத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. தாக்குதலுக்கு இலக்கான மதகுரு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்த நியூசவுத்வேல்ஸின் பொலிஸ் ஆணையாளர் கரென் வெப், கத்திக்குத்துத் தாக்குதலை மேற்கொண்ட 16 வயது இளைஞர் மதகுருவை நோக்கிச் சென்றவேளை மதரீதியான கருத்துகளைத் தெரிவித்துள்ளார்.

ஆராதனைகள் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டுக்கொண்டிருந்தவேளை கத்திக்குத்துத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஆராதனையில் கலந்துகொண்டவர்களை மாத்திரமின்றி அதைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களையும் அச்சுறுத்துவதே இதன் நோக்கம் என்று தெரிவித்தார். (எ-இ)

VACANCIES

Join our leading private English teaching institute's Jaffna and Kilinochchi branches! We're looking for:

1. English - IELTS Teacher
Preference given to those with relevant experience.

2. English Teacher for Minors
Applicants with relevant qualifications or those interested training are encouraged to apply. G.C.E O/L English training will be provided.

Send your profile file within seven days to:
Email: jobatjaffna@gmail.com
WhatsApp: 076 13 54 501

Techna
Technical institute
Smart thinking leads to innovate

A/L தொழினுட்பப்பிரிவு
A/L 2024 DAY CLASS ஆரம்பம்
17.04.2024 புதன்கிழமை, மாலை 3.30 மணிக்கு

| | |
|---|---|
| உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் | - M.விஷ்ணு, P.நிறோஜனன் |
| பொறியியல் தொழினுட்பவியல் | - S.மயூரதன் |
| தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் | - S.சக்தி |
| தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்(ICT) | - T.லவன் |
| விவசாய விஞ்ஞானம் | - S.சஜீபன் |
| கணிதம் 07 | - T.சசிகரன் |
| புவியியல் | - S.P.கரன் |

A/L 2025, 2024 பிரிவுகள் நடைபெறுகின்றன.
2025 பிரிவினருக்கான BSTவகுப்புக்கள் இலவசமாக நடைபெறுகின்றன
077 170 3549
இ வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

கடைக் கட்டடம் வாடகைக்குண்டு



கைதடியில் Boc வங்கிக்கு மேல் தளத்தில் அமைந்துள்ள கடைக் கட்டடம் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள், அலுவலகங்கள் நடத்துவதற்கு உகந்த இடம்.

தொடர்பு: 077 407 0730, 074 301 5921, 0041 7938 612 53

## நீங்கா நினைவில் ஓராண்டு

மண்ணில் 07 . 07 . 1967

விண்ணில் 29 . 04 . 2023



### அருளானந்தம் ஆனந்தக்குமார்

விதியின் சதிதானே..
உனை நினைக்கும் வேளையில்
விழிகளில் நதியாய்..
பாரமாகிவிட்டோம் என்றதாலோ..
தூரமாகப் போனாய்..

உற்ற கணவனாகவும்..
சிறந்த தோழனாகவும்..
அனைவருக்கும் பாசக்காரனாகவும்
இவ்வுலகில் வாழ்ந்தாய்
வாழ்ந்தது போதுமென்றா சென்றாய்?

பலகாலம் வாழ்ந்திருந்த
படுக்கையறை விட்டு
வண்ணப்புகைப்படமாய்
வாழ்ந்து கொண்டிருக்கிறாய் - நம்
வரவேற்பு அறையினிலே..

அடைந்தேயிருந்த உன்
படுக்கையறை
இப்பொழுதெல்லாம்
வாய் திறந்தே கிடக்கிறதே..
உந்தன் வெற்றிடத்தை
நிசப்தம் நிரப்பியிருக்கிறதே..

உன்னைக் காணாமல் உந்தன்
நினைவுகளோடு
உன் ஆன்மா சாந்தி அடைய
இறைவனை வணங்குகின்றோம்.

டச்சு வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(CS/00151) J-1

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 08 . 1941

மறைவு 15 . 04 . 2024



### திருமதி பத்மநாதன் பரமேஸ்வரி (தங்கச்சி அக்கா)

பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மநாதன் பரமேஸ்வரி அவர்கள் நேற்று முன்தினம் (15.04.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் - நாகம்மா தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சரஸ்வதி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பத்மநாதனின் (முன்னாள் பதில் ஆணையாளர், யாழ்.மாநகரசபை) அன்பு மனைவியும், சுரேந்திரன் (ஜேர்மனி), சிவேந்திரன் (கனடா), குமரேந்திரன் (கனடா), மயூறதி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜனப்பிரியா (ஜேர்மனி), சாளினி (கனடா), றாதிகா (கனடா), மகேந்திரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், வலயக் கல்வி அலுவலகம், தீவகம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பத்மஜன், ஜனோஜன் (ஜேர்மனி), விதுஷன், வர்ஷனா, கிஷா, ஹைறா, ரஷ்வின் (கனடா), விஷ்ணுஜா, டினோஜா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், தியாகராசா, சிவசுப்பிரமணியம், சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இந்திராதேவி, கமலாதேவி மற்றும் வாமதேவி, சரோஜினி தேவி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் புனிதவதி, இராசலட்சுமி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.4.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

185/6, பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.

(CR 42225) S-1

தகவல்: குடும்பத்தினர்.
T.P: 077 691 5303

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி :021 493 0000 - விளம்பரம் :021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.04. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.